ISSN 1391-9504

# விஜய்

Vijey විජය්

24.04.2013 - மலர் 10, இதழ் 08

## பழமரங்களை எவ்வாறு பயிரிடலாம்?





புவியீர்ப்பு விசையால் ஒளிரும் விளக்கு

உலகப் புகழ்

## சிறுவர் கதை எழுத்தாளர் கிறிஸ்டியன் என்டர்சன்



விலை ரூபா 15/-

மாணவர்களுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பண்டாரவன்னியனின் போர் வியூகம்

கெப்டன் எட்வட் மெட்சின் மேலும் கடுமையான தாக்குதலை முல்லைத்தீவின் உட்பகுதியை நோக்கி மேற்கொண்டான். இவற்றை அறிந்த பண்டாரவன்னியன் கொதிப்படைந்தான். ஆங்கிலேயப் படைகள் மீது ஆங்காங்கே பல தாக்குதல்களை மேற்கொண்டு ஆங்கிலேயப் படைகளை வன்னிக்குள் முன்னேறவிடாது தடுத்தான். சிறிய படைப்பிரிவுகளோடு வந்து பண்டாரவன்னியன் தாக்குவதைக் கண்ட ஆங்கிலேய வெள்ளை இனத்தவர்கள் நடுநடுங்கினார்கள். இவ்வாறான தாக்குதலை எதிர்கொள்ள முடியாத ஆங்கிலேய நிர்வாகம் ஜோன்யுவல் என்னும் போர்த்திறன் கொண்ட அதிகாரியின் தலைமையில் ஒரு படைப்பிரிவை வன்னியைக் கைப்பற்றும் நோக்குடன் அனுப்பியது.

இப்படைப் பிரிவு 'பத்தொன்பதாவது றெஜிமென்ட்' என அழைக்கப்பட்டது. இப்படையினர் வன்னிக்குள் புகுந்து பல இன்னல்களை ஏற்படுத்தினர். சில வன்னியின் சிற்றரசர்கள் இந்த ஆங்கிலேயப் படைகளுக்கு உதவியாக இருந்து செயற்பட்டனர். இத்தருணத்தில் எப்படியாவது வன்னி நாட்டைக் கைப்பற்ற வேண்டும் என்று குறியாய் இருந்த ஆங்கிலேய நிர்வாகம் மன்னாரிலிருந்து வன்னியை நோக்கிப் பெரும் படையை நகர்த்தியது. இந்தப் படைப் பிரிவுக்கு கெப்டன் றிபேக் என்பவன் தலைமை தாங்கினான். இப்படைப் பிரிவு மூன்றாவது படைப்பிரிவு என அழைக்கப்பட்டது.

மன்னாரிலிருந்து புறப்பட்ட இந்தப் படைப்பிரிவை நோக்கி பண்டாரவன்னியனின் படைப்பிரிவுகள் கடும் தாக்குதலை மேற்கொண்டன. எனினும், ஆங்கிலேயப் படைகள் பீரங்கிகள் மூலம் எதிர்த்தாக்குதலை நடத்தி வன்னியை நோக்கி முன்னேறின. தனது பீரங்கிப் படைப்பிரிவை எதிர்த்து நின்ற பண்டாரவன்னியனின் படைப்பிரிவினரைக் கண்டு கெப்டன் றிபேக் ஆச்சரியமுற்றான். இலங்கைத் தீவைக் கைப்பற்றியபோதுகூட இவ்வாறான எதிர்ப்பை அவன் கண்டதில்லை.



பண்டாரவன்னியனின் போர் வியூகத்தைக்கண்டு அவன் அதிசயித்தான். எங்கிருந்து எதிரிகளைத் தாக்குகின்றான் என்பதைக் கண்டறிய கெப்டன் றிபேக்கால் முடியவில்லை. வீரத்திற்கும், தன்மானத்திற்கும் இலக்கணமாக இருந்த பண்டாரவன்னியன் தனது மண்ணை ஆங்கிலேயர்களிடம் இழந்துவிட விரும்பவில்லை. அவன் தந்தை, தாய், சகோதரர்கள் எவருமே மண்ணை அந்நியருக்கு விட்டுக்கொடுப்பதை ஏற்கவில்லை. இதனால், பண்டாரவன்னியன் வன்னி மண்ணை 'அடங்காப்பற்று' எனப் பெயரிட்டான். தான் உயிரோடு இருக்கும்வரை ஆங்கிலேயப் படைகள் எம் மண்ணின் வளங்களை சூறையாடுவதை அவன் ஏற்கவில்லை. கப்பம் கட்டி வாழவும் அவன் மனம் இடந்தரவில்லை. அதனால், சுத்த வீரனான பண்டாரவன்னியன் வன்னி மண்ணை ஆக்கிரமிக்க நினைக்கும் ஆங்கிலேயப் படைகளுக்கு அஞ்சாது அவர்களை எதிர்த்து நின்றான்.

(தொடரும்)

---

விஜய் Bookvin

## இணைந்து வழங்கும் கேள்வி-பதில்

# அறிவுத் தேடல்

**நீங்களும் இப்பகுதியில் உங்கள் கேள்விகளைக் கேட்கலாம். இந்தவாரம் தலா ரூபா 500 பெறுமதியான நூல்களை பரிசாகப் பெறும் கேள்விகள்.**

**✱ மரங்கொத்திப் பறவை மரத்தைக் கொத்திக் கொண்டு இருப்பது ஏன்?**

**எம்.எப்.ஸாய்லா, மாவனல்லை.**

பிரதானமாக இதற்கு மூன்று காரணங்கள் இருக்கின்றன. முதலாவது, மரப்பட்டையின் மேலும், கீழும் வாழும் சின்னஞ்சிறிய பூச்சிகளை இரையாக்கிக்கொள்வதற்கு அவை அவ்வாறு கொத்துகின்றன. எறும்புகள், கறையான்கள் போன்றவை இதற்கு உதாரணம். இரண்டாவது, மரத்தைக் கொத்திக்கொத்தி ஒரு குழி அல்லது பொந்து போன்ற குடைவை ஏற்படுத்தி அதனை தமது வசிப்பிடமாக மாற்றிக்கொள்வதற்கும் அங்கு முட்டைகளை இடுவதற்கும் அவ்வாறு கொத்துகின்றன. மூன்றாவது, மரம் கொத்தும் ஒலியை மரங்கொத்திகள் உரையாடல் மொழியாகப் பயன்படுத்துகின்றன என்றும் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். குறிப்பாக, தனது சிறப்புத்தன்மையை எதிர்பாலிடத்தில் விபரிக்கும் ஊடகமாகவும் பயன்படுத்துகின்றன.



**✱ விமானத்திலிருக்கும் செம்மஞ்சள் நிறத்திலான பெட்டி, ஏன் 'கறுப்புப் பெட்டி' என அழைக்கப்படுகின்றது?**

***ஷஹ்னாஸ் பேகம், சம்மாந்துறை-10.***

கறுப்புப் பெட்டியானது, விமானம் வானில் பறக்கும்போது நடைபெறும் சம்பவங்களையும், தகவல் பரிமாற்றம் மற்றும் தகவல்களையும் சேகரித்து வைக்கிறது. சிலவேளைகளில் விமானம் விபத்துக்குள்ளானால், அந்த விமானத்தில் உள்ள அனைத்துப் பாகங்களும் சேதமடைந்தாலும் இந்த கறுப்புப் பெட்டிக்கு மாத்திரம் எதுவும் ஆகாவண்ணம் மிகவும் உறுதியாக உருவாக்கப்பட்டுள்ளது. 1965 இல் இருந்துதான் இப்பெட்டிக்கு செம்மஞ்சள் நிறம் கொடுக்கப்பட்டது. ஏனெனில், விபத்துக்குள்ளான சேதமடைந்த பொருட்களுக்குள் இலகுவில் இதனை இனம் கண்டுகொள்வதற்காக செம்மஞ்சள் வர்ணம் கொடுக்கப்பட்டது. ஆனாலும், ஆரம்பத்தில் கறுப்பு வர்ணமே பூசப்பட்டதால், தொடர்ந்தும் இது 'கறுப்புப் பெட்டி' என்றே அழைக்கப்படுகின்றது.






**கேள்விகளை அனுப்ப வேண்டிய முகவரி:**

அறிவுத் தேடல்,
'விஜய்'
த.பெ.இல: 2037, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479652,
மின்னஞ்சல்: Vijey@Wijeya.lk


எபோலா வைரஸின் நுணுக்குக்காட்டித் தோற்றம்




# காற்றினாலும் பரவக்கூடிய உயிர்கொல்லி:

# 'எபோலா வைரஸ்'

'எபோலா வைரஸ்' (Ebola Virus) ஆனது, காற்றின்மூலமும் பரவக்கூடிய வாய்ப்பு இருப்பதாக அண்மைக்கால ஆய்வுகளின் மூலம் உறுதிசெய்யப்பட்டுள்ளது. 'எபோலா' என்பது டெங்கு போன்றதொரு வைரஸாகும். 'உயிர்கொல்லி வைரஸ்' என இனங்காணப்பட்டுள்ள எபோலா வைரஸ் தொற்றிலிருந்து பாதுகாப்புப் பெற, இதுவரை எந்த விதமான மருந்துகளும் கண்டறியப்படவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த வைரஸ் மனிதனின் உடலுக்குள் சென்ற பின்பு துரித கதியில் உடல் உறுப்புக்கள் செயல் இழந்து, இரத்தக் கசிவு ஏற்பட்டு மரணம் சம்பவிக்கும். அதேபோன்று, எபோலா வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ள குருதியினாலும் இந்த வைரஸ் பரவலடையும். எனினும், இவ்வாறு தொற்றும் நிலைமை மாற்றம் பெறலாம் என்று கெனேடிய மருத்துவ ஆய்வாளர்கள் சிலர் தெரிவித்துள்ளனர். தாம் மேற்கொண்ட சில ஆய்வுகளை அடுத்தே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

கெனடாவின் வினிபெக்கைச் சேர்ந்த மெனிடோபா பல்கலைக் கழக ஆய்வாளர்கள் சிலர், மெக்கோ இன குரங்குகள் இருந்த கூட்டின் அருகிலுள்ள மற்றுமொரு கூட்டில் எபோலா வைரஸ் உட்செலுத்தப்பட்ட ஆறு பன்றிக் குட்டிகளை அடைத்து வைத்து அவற்றை ஆய்வு செய்தனர். எட்டு நாட்களுக்குள் வேறு கூட்டில் அடைக்கப்பட்ட அந்த நான்கு மெக்கோ குரங்குகளுக்கும் பன்றிக்குட்டிகளுடன் எந்தவிதமான நேரடித் தொடர்பும் இன்றி இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அதன்படி, பன்றிகளின் சளியிலிருந்து வெளியேறிய குறித்த வைரஸ், காற்றில் பரவி, குரங்குகளைத் தொற்றியுள்ளமை உறுதிசெய்யப்பட்டுள்ளதாக இந்த ஆய்வில் கலந்துகொண்ட கெனடாவின் மக்கள் சுகாதார நிறுவனத்தின் தேசிய நுண்ணங்கிகள் ஆய்வகக் கலாநிதி கெரி கொபின்பர் தெரிவித்துள்ளார்.

பன்றிகள், சிம்பன்சிகள், கொரில்லாக்கள், குரங்குகள், என்டிலொப்கள், முள்ளம்பன்றிகள் என்பன உட்பட, இவற்றுடன் பழகிய மனிதர்களுக்கும் இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டுள்ளமை தற்போதளவில் கண்டறியப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், பழங்களை உட்கொள்ளும் வெளவால்களே இந்த எபோலா வைரஸினை பரப்பும் பிரதான உயிரினம் என்று இதுவரை கருதப்பட்டு வந்தது. ஆனால், இந்த வைரஸ் பன்றிகளூடாகப் பரவும் வாய்ப்பே அதிகம் உள்ளதாக தற்போது கண்டறியப்பட்டுள்ளது.

ஆபிரிக்கா கண்டத்தைச் சேர்ந்த நாடுகளிலேயே, இந்த வைரஸ் பெருமளவு பாதிப்பை ஏற்படுத்தக்கூடியதாக உள்ளது. அண்மையில் உகண்டாவில் இந்த வைரஸ் தொற்றுக்குள்ளான சிலர் இனங்காணப்பட்டதோடு, அவர்கள் ஏனைய மக்களிடமிருந்து ஒதுக்கி வைக்கப்பட்டனர். இந்த வைரஸ் தொற்றுக் காரணமாக, அங்கு சிலர் மரணத்தை தழுவியும் உள்ளனர். எபோலா வைரஸ் உடலுக்குள் சென்றவுடன், மனிதனைப் போன்றே, ஏனைய பாலூட்டிகளுக்கும் கடும் காய்ச்சல் ஏற்படுகின்றது.


எபோலா வைரஸ் தாக்கத்திற்குட்பட்ட நோயாளியொருவரை பரிசோதிக்கும் மருத்துவர்கள்

## நோய் கண்டுபிடிப்பு

1976 ஆம் ஆண்டு கொங்கோவின் எபோலா நதியை அண்டிய பகுதியிலேயே முதன்முதலில் இந்த வைரஸ் கண்டுபிடிக்கப்பட்டது. அதனால்தான் இந்த வைரஸிற்கு 'எபோலா' என்ற பெயர் சூட்டப்பட்டது. இந்த வைரஸுக்கான சிகிச்சை முறைகளோ, இதனால் பீடிப்பதனைத் தடுப்பதற்கான தடுப்பு மருந்துகளோ இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை.

## நோய் அறிகுறிகள்

காய்ச்சல், தலைவலி, மூட்டு மற்றும் தசைநார்ப் பகுதிகளில் கடும் வேதனை, தொண்டை உலர்தல், உடற் பலவீனம் என்பன இந்த நோய்க்கான அறிகுறிகளாகும். இந்த நோய் அறிகுறிகள் ஏற்பட்ட பின்னர் வயிற்றோட்டம், வாந்தி, வயிற்றுவலி என்பனவும் ஏற்படக்கூடும். சில நோயாளிகளுக்கு சருமத்தில் கொப்புளங்கள் ஏற்படல், கண்கள் சிவப்படைதல், விக்கல், உடலின் உட்புறம் மற்றும் வெளிப்புறத்தில் இரத்தக் கசிவுகள் ஏற்படவும்கூடும்.

எபோலா வைரஸ் தொற்றுக்குள்ளான ஒருவரிடம் காணக்கூடிய பாதிப்புக்கள்



## வாசகர் முகம்



இந்த வாரம் இடம்பெற்றிருப்பவர்

**என்.அஷ்வின் பிரேம்,**
அக்கரப்பத்தனை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எறும்புகள் கேட்ட வரம்



ஒருநாள் சிற்றெறும்புகள் அனைத்தும் ஒன்று கூடின. அங்கு தலைவர் எறும்பு, "அன்பான சிற்றெறும்புகளே! ஒரு விடயத்தைப் பற்றி விவாதிக்கத்தான் நாம் இங்கு கூடியுள்ளோம். நம்மைப் படைத்ததும் கடவுள்தான். கொடிய விஷப் பாம்புகளைப் படைத்ததும் கடவுள்தான். ஆனால், கடவுள் படைப்பு விடயத்தில், எமக்குப் பாதகம் செய்துவிட்டார். பாம்பு கடித்தால் மனிதர்கள் இறந்துவிடுகின்றனர். ஆனால், நாம் கடித்தால் அவர்கள் இறப்பதில்லை!"

"ஆமாம்! தாங்கள் சொல்வது சரிதான். கடவுள் நம் விடயத்தில் பாதகம்தான் செய்துவிட்டார்!" என்றன மற்ற சிற்றெறும்புகள். "இந்த விடயத்தைக் கடவுளிடமே கூறி முறையிடுவோம். நாம் கடித்தாலும் மனிதர்கள் சாகவேண்டும் என்ற வரத்தைக் கேட்போம். அதன் பின்னர் நம்மை நசுக்கிக் கொல்ல ஒரு மனிதனும் இந்த உலகில் இருக்க மாட்டான். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?" என்று கேட்டது தலைவர் எறும்பு.

"தாங்கள் சொல்வதை அப்படியே ஆமோதிக்கிறோம்!" என்றன சிற்றெறும்புகள். உடனே, அவை அனைத்தும் கடவுளை எண்ணித் தவமிருக்கத் தொடங்கின. சில நாட்களுக்குப் பின் அவற்றின் முன்னே கடவுள் தோன்றினார். "சிற்றெறும்புகளே! உங்களுக்கு என்ன வரம் வேண்டும்?" என்று கடவுள் கேட்டார். எறும்புகளின் சார்பாக, தலைவர் சிற்றெறும்பு தங்கள் கோரிக்கையைக் கடவுளின் முன்னே வைத்தது.

"நாங்களும் கடித்தால், சாக வேண்டும் கடவுளே!"

"சரி! அப்படியே ஆகட்டும்!"

வரம் கொடுத்து விட்டுக் கடவுள் மறைந்தார். சிற்றெறும்புகளுக்கு ஒரே ஆனந்தம். அந்த ஆனந்தத்தில் கண்ணில்பட்ட மனிதர்களையெல்லாம் கடித்தன. கோபம் கொண்ட மனிதர்கள் அவற்றை விரல்களுக்கு இடையே வைத்து நசுக்கிக் கொன்றனர். தப்பிப் பிழைத்த சிற்றெறும்புகள் திகிலோடு மீண்டும் ஒன்று கூடின. "என்ன கொடுமை இது? மனிதர்கள் மீண்டும் எம் இனத்தைக் கொல்கின்றனரே. கடவுள் என்ன வரம் கொடுத்தார்?" என்று கூக்குரலிட்டன.

மீண்டும் அவை தவமிருந்து கடவுளிடம் முறையிட்டன. அதற்கு கடவுள், "நாங்களும் கடித்தால் சாக வேண்டும் என்று நீங்கள்தானே வரம் கேட்டீர்கள். அதைத்தானே நானும் கொடுத்தேன். இப்போது என்னையே குறை சொல்கிறீர்களே" என்று கேட்டார் கடவுள்.

சிற்றெறும்புகள் ஒன்றை, ஒன்று பார்த்துக் கொண்டன. "கடவுளே! நாங்களும் கடித்தால் சாக வேண்டும் என்று குறிப்பிட்டது. மனிதர்களை விஷப் பாம்புகள் கடித்தால் மனிதர்கள் சாகிறார்களே... நாங்களும் மனிதர்களைக் கடித்தால் சாகவேண்டும். அந்த விஷம் எங்கள் உடலுக்கும் வரவேண்டும் என்றுதான் கேட்டோம். எங்களை நாங்களே அழித்துக்கொள்ள வரம் கேட்போமா?" என்று கூறின.

கடவுள் கோபத்தோடு சிற்றெறும்புகளைப் பார்த்தார். "யார் சாகவேண்டும் என்று நீங்கள் தெளிவாகச் சொல்லவில்லை. தவிர, உங்கள் ஆசை மிகவும் கொடூரமானது. கோடிக்கணக்கில் உற்பத்தியாகும் உங்களுக்குப் பாம்பின் விஷத்தைக் கொடுத்தால் மனித இனத்தையே அழித்துவிடுவீர்கள். அது ஒருபோதும் நடக்காது. நான் ஒருமுறை வரம் கொடுத்தால் கொடுத்ததுதான். அதை மாற்ற முடியாது. கடித்தால் மனிதர்களால் நசுக்கப்பட்டு சாகவேண்டும் என்பதைத்தான் உங்கள் தலையில் எழுதியிருக்கிறேன். அதையும் என்னால் மாற்ற முடியாது. உடனடியாக இங்கிருந்து போய்விடுங்கள்!" என்று எச்சரித்துவிட்டு மறைந்தார் கடவுள். சிற்றெறும்புகள் அவமானத்தால் குறுகி, சோகத்துடன் அந்த இடத்தைவிட்டு அகன்றன.

# அதிசயக் கிரகமும் அப்பாவிச் சிறுவர்களும்.....




பன்-பாலா

(இதுவரை.....)

"தம்பிகளே! இவ்வாறு உடல்களைப் பாதுகாக்கின்ற முறையை 'ப்ளாஸ்டினைசேஷன்' என்று சொல்வோம். மேலும், இங்கே பல உறுப்புகளைப் பாதுகாக்கிறோம். தவிர, உடம்புக்குத் தேவையான பாகங்களையும் தயாரிக்கிறோம்" என்றார்.

"என்ன? உடம்பிற்கான பாகங்களை உற்பத்தி பண்ணுகிறீர்களா?" என்று மூவரும் ஒரே குரலில் வியப்புடன் கேட்டார்கள்.

இனி.....

இராமபுத்திரன் உற்சாகமாகச் சிரித்தார். "பிள்ளைகளே, ஒரு காலத்தில் சாத்தியப்படாது என்று நினைத்ததெல்லாம் இப்போது சாத்தியமாகிறது.

"சரி! முதலில் உடம்பின் பகுதிகளைப் பார்க்கலாம். வாருங்கள்...!" என்று கூறிவிட்டு நகர்ந்தார். மூவரும் அவரைப் பின்தொடர்ந்தார்கள். ஓர் அறைக்குள் அவர் நுழைந்தார். அங்கு வரிசையாகக் கண்ணாடிப் பாத்திரங்கள் பல காணப்பட்டன. அவற்றுள் ஒன்றைச் சுட்டிக்காட்டினார். அப்பாத்திரத்துக்குள் மனித இருதயம் ஒன்று மிதந்து கொண்டிருந்தது.

"இது..... இது......!" இழுத்து நிறுத்தினான் சுதன்.

"இருதயம்! உயிருடனான இருதயம். இருதய நோயாளி ஒருவருக்கு இதனைப் பொருத்தலாம்."

## நீர்க்குழந்தை!



"நீர்க்குழந்தை எங்கே?" என்று பிரியன் ஆவலுடன் கேட்டான்.

"ம்! வாங்க அதையும் பார்த்திடலாம்" என்று கூறிவிட்டு இரண்டு கூடங்களைக் கடந்து அவர்களை அழைத்துச் சென்றார் இராமபுத்திரன்.

அங்கே மீன் தொட்டியைப் போல பெரிதாக நீர் நிரப்பப்பட்ட ஒரு கண்ணாடிப் பெட்டி ஒன்று இருந்தது. அதனை ஆவலோடு பார்த்தார்கள். என்ன ஆச்சரியம்! நீர்க்குழந்தை என்று சொல்லக்கூடிய ஓர் உடலமைப்பு உயிருடன் நீருக்குள் வலம் வந்தது.

"இதுதான் நீர்க்குழந்தை. குளோனிங் முறையில் உருவாக்கப்பட்டது. சாதாரண ஒரு குழந்தையின் முகத்தையும் ஒரு மீனினது உடலத்தையும் ஒன்று சேர்த்து இதை உருவாக்கியிருக்கிறோம். அதனால்தான் மனித முகத்தை இதில் பார்க்கிறோம். நீந்துவதற்கு சில விசேட உப உறுப்புகள் தேவை. அதனால்தான் மீனின் உறுப்புக்களை உருவாக்கியிருக்கிறோம....."

"இது எவ்வளவு காலம் உயிர் வாழும்?" அஷ்வின் கேட்டான்.

"ம். எங்களுக்கே தெரியாது. இது ஒரு பரிசோதனை முயற்சி. அவ்வளவுதான்!"

அதே நேரம் இராமபுத்திரனின் கைக்கடிகாரத்திலிருந்து மெல்லிய ஒலி ஒன்று எழுந்தது. பின் சங்கேத மொழியில் ஏதோ தகவல் வந்தது.

"பிள்ளைகளே! எனக்கு ஒரு முக்கிய தகவல் வந்திருக்கிறது. அரைமணி நேர வேலை ஒன்று எனக்காகக் காத்திருக்கிறது. அதை முடித்துவிட்டு வருகிறேன். அது வரையில் நீங்கள் ஆய்வு கூடத்திலேயே இருக்கலாம். ஆனால் ஒரு எச்சரிக்கை. எதிலும் கை வைக்கக் கூடாது....." என்று பெரிய குரலில் கூறிவிட்டு சிரித்துக் கொண்டே அங்கிருந்து சென்றார்.

சிறுவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள்.

"சரி! இன்னும் என்னென்ன அதிசயங்கள் இங்கு இருக்கிறதென்று பார்ப்போம்!" அஷ்வின் கூற சுதனுக்கும் பிரியனுக்கும் அது சரியெனப்பட்டது.

உற்சாக மிகுதியால் மூவரும் ஆய்வுகூடத்தை அலசலானார்கள். மர்மமான சில அறைகள் மூடப்பட்டிருந்தன. அவற்றைத் திறக்க அவர்கள் முயற்சிக்கவில்லை.

திடீரென "அங்கே பாருங்கள்! என்னவோ ஊர்ந்து வருகிறது....!" என்று அஷ்வின் சத்தமிட்டான்.

சுதனும் பிரியனும் பார்வையைக் கூர்மையாக்கிக் கொண்டார்கள். மனித உடலமைப்புக்கொண்ட ஆனால், விலங்கு போல ஊர்ந்து வரும் சிறுவன் அல்லது இளைஞன். அவனது இடுப்புப் பகுதியும் கை கால்களும் கீழ் நோக்கி வளைவாக இருந்ததால் அவனால் நிமிர வாய்ப்பில்லை. மூவரும் மெதுவாக அவனருகே சென்றார்கள்.

"பாவம்! பிறவியிலேயே இப்படித்தான் போல இருக்கு....!" சுதன் அனுதாபப்பட்டான்.

அவனை உற்றுப்பார்த்த அஷ்வின் "ஹலோ...!" என்றான்.

சிறுவனா அல்லது இளைஞனா என்று யூகிக்க முடியாத தோற்றத்திலிருந்த அவனால் பேச முடியுமா என்ற ஐயம். ஆனால், சிறுவன் பதிலுக்கு "ஹலோ!" என்றான். இவர்கள் மூவருக்கும் உற்சாகம் வந்தது. ஆனால் எந்த மொழியில் பேசுவது, என்ன கேட்பது என்று மூவருக்கும் குழப்பம். அவர்களது பிரச்சினையை உணர்ந்துகொண்டதுபோல அந்தப் பையன் ஆங்கிலத்தில் பேசினான். முதலில் அவனது உச்சரிப்புச் சரியாகப் பிடிபடவில்லை. இரண்டாவது தடவையாகப் பேசியபோது புரிந்தது.

"அன்பு நண்பர்களே! புதிதாக வந்திருக்கிறீர்களா?" என்று அவன் கேட்டான். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகப் புகழ்பெற்ற சிறுவர் தேவதைக் கதை எழுத்தாளர்

# ஹான்ஸ் கிறிஸ்டியன் என்டர்சன்

டென்மார்க் நாட்டவரும் உலகப் புகழ்பெற்ற சிறுவர் தேவதைக் கதை எழுத்தாளருமான ஹான்ஸ் கிறிஸ்டியன் என்டர்சன், 1805 ஆம் ஆண்டில் பிறந்தார். இவர், சிறுவர் கதை மட்டுமன்றி, கவிதைகள் இயற்றுதல், கடதாசியைக் கொண்டு பல்வேறு மாறுபட்ட உருவங்களை வடிவமைத்தல் போன்றவற்றிலும் திறமைகளைப் பெற்றிருந்தார். உலகம் பூராகவும் பல்வேறு நாடுகளுக்கு விஜயம்செய்து அவர் படைத்த சிறுவர்களுக்கான தேவதைக் கதைகளினூடாக, அவர் முன்வைத்த கருத்துக்கள் இன்றும்கூட சிறுவர்கள், பெரியோர்கள், இளைஞர்கள், வயோதிபர்கள் மத்தியில் பலத்த வரவேற்பைப் பெற்றுள்ளன.

### 1805
ஏப்ரல் 02 ஆம் திகதி டென்மார்க், ஒடென்ஸ்ஸில் பிறந்த இவர், குடும்பத்தில் ஒரே பிள்ளையாவார்.

### 1818
இவர் வறிய பிள்ளைகளுக்கான பாடசாலையொன்றில் கல்வி கற்றார். தனது தந்தையின் தொழிலில் ஒத்தாசையாக இருந்தார்.

### 1819
நடிப்பாற்றலூடாக, தொழிலொன்றைத் தேடி கொப்பன்ஹேகன் நகரத்திற்குச் சென்றார். அங்கு கவிதை, கதைகளை எழுதுவதற்குப் பழகிக்கொண்டார்.

### 1822
Ghost at Palnatoke's என்ற தனது முதலாவது சிறுவர் நூலை எழுதினார். 1827 ஆம் ஆண்டு வரை எல்ஸினோரில் பாடசாலையொன்றில் கல்வி கற்றார்.

### 1829
ஏராளமான சிறுவர் கதைகளை எழுதிவந்தார். மேடை நாடகங்களையும் எழுதினார்.



### 1833
டென்மார்க் அரசினால் வழங்கப்பட்ட விசேட வரப்பிரசாதமாக ஐரோப்பா முழுவதையும் சுற்றிப்பார்க்கும் வாய்ப்பைப் பெற்றார். இந்த பயண இடைவெளிகளில் தேவதைக் கதைகளை எழுதினார்.

### 1835
'The Improvisatore' என்ற பெயரில் தனது முதலாவது நாவலை வெளியிட்டார். அத்துடன், அவரது சிறுவர் தேவதைக் கதைகளின் தொகுப்பு நூலும் வெளியிடப்பட்டது.

### 1847
பிரிட்டனில் சுற்றுலாவினை மேற்கொண்டார். இதன் போது இவருக்கு பிரபல்யம் பெற்ற சிறுவர் கதை எழுத்தாளர் சார்ள்ஸ் டிக்கன்ஸை சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது.



1967 ஆம் ஆண்டிலிருந்து ஒவ்வொரு வருடமும் என்டர்சனின் பிறந்ததினமாகிய ஏப்ரல் 02 ஆம் திகதியை சர்வதேச சிறுவர் புத்தக தினமாக பிரகடனப்படுத்தியுள்ளனர்.

### 1875
ஓகஸ்ட் 04 ஆம் திகதி கொப்பன்ஹேகன் நகரில் புற்றுநோய் காரணமாக மரணமடைந்தார். டென்மார்க் அரசு இவரை தேசிய சொத்தாகப் பிரகடனப்படுத்தியது.




### 2005
ஹான்ஸ் கிறிஸ்டியனின் 200 ஆவது பிறந்ததினமாக அமைந்த 2005 ஆம் ஆண்டை 'என்டர்சனின் வருடம்' என்று டென்மார்க் அறிவித்தமை குறிப்பிடத்தக்கது.




200 ஆம் வருட நினைவு தினத்தையிட்டு மோல்டா வெளியிட்ட முத்திரை.







ஹான்ஸ் கிறிஸ்டியன் கடதாசியினால் வடிவமைத்த நிர்மாணங்களையும் அவற்றினூடாக உணர்த்தப்பட்ட கதாபாத்திர உருவங்களையும் படத்தில் காணலாம்.

ஹான்ஸ் கிறிஸ்டியன் என்டர்சன் எழுதிய சிறுவர் தேவதைக் கதை நூல்களும் கதைகளின் தொகுப்புக்களில் சிலவும். இவ்வாறு 168 கதைகள் அளவில் என்டர்சனால் எழுதப்பட்டுள்ளன.







என்டர்சனின் வாழ்க்கை வரலாற்றையும் அவரது படைப்புக்களையும் கருவாகக் கொண்டு 1952 ஆம் ஆண்டில் அமெரிக்காவில் திரைப்படமொன்றும் வெளியாகியது.




டென்மார்க்கின் கொப்பன்ஹேகன் நகரிலும் என்டர்சன் பிறந்த ஒடென்ஸ் நகரிலும் நிறுவப்பட்டுள்ள அவரது சிலைகள் சில.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழங்களை உண்பதற்கு அனைவருமே விரும்புவர். அவை பலதரப்பட்ட சுவைகளில், வடிவங்களில் உள்ளன. பழங்களில் பல விற்றமின்களும் ஊட்டச்சத்துக்களும் ஆரோக்கியத்தைப் பேணும் விடயங்களும் உள்ளடங்கியுள்ளன. எனவே, ஒவ்வொருவரும் தத்தமது வீட்டுத் தோட்டத்தில் ஒரு பழமரத்தையேனும் வளர்ப்பது என்பது நன்மை பயக்கும் என்றே கூற வேண்டும். பழமரம் ஒன்றினை சரியாகப் பராமரிப்பதன் ஊடாக, நல்ல விளைச்சலைப் பெற்றுக் கொள்ள முடியும். அந்தவகையில், வீட்டுத் தோட்டத்தில் பழமரம் ஒன்றை நாட்டி, அதனை எப்படிப் பராமரித்து சிறந்த பயனைப் பெறலாம் என்பது பற்றி நோக்குவோம்.





# வீட்டுத் தோட்டத்தில் பழமரம் நடுவோம்

## வீட்டுத் தோட்டத்தில் பழமரங்கள் இருப்பதன் பயன்

சந்தையில் விற்பனைக்கு உள்ள ஏராளமான பழங்கள், அனேகமாக ரசாயனங்களின் ஊடாகவே பழுக்க வைக்கப்படுகின்றன. இவற்றை உட்கொள்வதனால் உடலினுள் நச்சு சேர்ந்து தீங்கு ஏற்படுகின்றது. காலம் செல்லும்போது, இதனால் மனிதருக்குப் பல நோய்கள் ஏற்படுகின்றன. ஆகவே, வீட்டுத் தோட்டத்தில் உள்ள இடவசதிக்கு ஏற்ப, ஒரு பழமரத்தையேனும் நடுவதனூடாக, சுவையும் ஆரோக்கியமும் கொண்ட பழங்களை உட்கொள்ள முடியும். இவ்வாறான பழங்களிலிருந்து இயற்கையாகக் கிடைக்கும் விற்றமின்கள் நமது உடலை சென்றடைவதனால், உடல் ஆரோக்கிய நிலை பேணப்படுவதுடன், உடல் அழகினையும் மேம்படுத்திக் கொள்ள முடியும்.





## வீட்டுத் தோட்டத்தில் பயிரிடக்கூடிய பழமரங்கள்

- மாம்பழம் ✱ விளாம்பழம்
- வெரலிக்காய் ✱ நாரங்
- செப்பதில்லா ✱ தோடம்பழம்
- ஜம்போல ✱ கொய்யா
- தூரியன் ✱ மங்குஸ்தான்
- பலா ✱ ஜம்பு ✱ ஆனைக்கொய்யா
- வாழை ✱ பப்பாசி ✱ திராட்சை
- அன்னாசி ✱ சீத்தாப்பழம்
- மாதுளம்பழம் ✱ உகுரெஸ்ஸ
- லொவி ✱ பெயார்ஸ்
- கொடித்தோடை ✱ றம்புட்டான்
- ஸ்ட்ரோபெரி

இந்த பழமரங்களை எந்தவொரு பகுதியிலும் இலகுவில் பயிரிட்டு வளர்க்கலாம். அன்னாசி, வாழை, பப்பாசி போன்றவை வருடம் முழுவதும் விளைச்சல் தரக்கூடியவை. வீட்டுத் தோட்டங்களில் மேற்படி பழமரங்களில் ஏதாவது ஒன்றையேனும் வளர்ப்பதன்மூலம் சிறந்த பலனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

## பழக்கன்றினைத் தெரிவுசெய்தல்

பழக்கன்று ஒன்றை பயிரிடுவதற்கு முன்னர் அறிந்துகொள்ள வேண்டிய விடயங்கள் பல உள்ளன. முதலில் நீங்கள் நடப் போகும் பழக்கன்று வளர்வதற்குப் பொருத்தமான இடமாக உங்கள் வீட்டுத் தோட்டம் இருக்கிறதா? என சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஏனெனில், நீங்கள் வாங்கும் பழக் கன்று உங்கள் பகுதிக்குப் பொருத்தமற்றதாயின், நீங்கள் அதனை சரியாகப் பராமரித்தாலும் உரிய பலன்களைப் பெற்றுக்கொள்ள முடியாது. ஆனால், அதுவே ஒட்டுத்தாவரமாக இருந்தால், குறுகிய காலத்தில் பலனைப் பெறக்கூடியதாக இருக்கும்.

அத்துடன், வீட்டுத் தோட்டத்தில் வளர்க்க எண்ணும் பழக்கன்றை அதன் தாய்த் தாவரத்தில் இருந்து பெறுவதே சிறந்தது. அப்போதுதான் அது ஆரோக்கியமான-பலமான தாவரமாக இருக்கும். குறுகிய காலத்தில் வளர்ந்து விளைச்சலைத் தரக்கூடிய பழக்கன்றுகளையே வீட்டுத் தோட்டத்தில் நடுவதற்குத் தெரிவுசெய்ய வேண்டும். அப்போதுதான் அதன் பயனை விரைவில் அடையக்கூடியதாக இருக்கும். வீட்டுத் தோட்டத்தின் அளவுக்கேற்ப மரங்களை தெரிவுசெய்வதும் நல்லது.

## கன்று வளர்வதற்கு உதவி செய்யுங்கள்

பழக்கன்றினை தோட்டத்தில் ஓரிடத்தில் நாட்டிவிட்டு அது வேரூன்றும் வரை அதற்கு உதவியாக தடியொன்றை அருகில் நாட்டி வைக்கலாம். இந்த தடியின் உதவியினால் குறித்த கன்று நேரடி வளர்ச்சியினைப் பெறும். இல்லாவிட்டால் கன்றுகளின் ஆணிவேர் பாதிக்கப்படுவதுடன், கன்றும் சரிந்துவிடும்.

## குழி தோண்டுதல்

பழக்கன்றை நடுவதற்கு முன்னர் சரியான முறையில் குழியினைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டும். கன்றின் அளவுக்கு ஏற்பவே, குழியின் அளவும் இருக்க வேண்டும். குழியில் நீரைப் பேணி வைப்பதற்காக குழியின் மேல் நோக்கி இருக்குமாறு தேங்காய் மட்டைகளை அடுக்கி வைப்பது சிறந்தது. குழி தோண்டும்போது, அப்புறப்படுத்தப்பட்ட மண்ணில் நன்கு உக்கிய இயற்கைப் பசளையான மாட்டுச் சாணி அல்லது கொம்போஸ்ட் உரத்தினைக் கலந்து குழியை நிரப்ப வேண்டும்.

## பிரதான உரம்

பழக்கன்றினை நடுவதற்கு இரு தினங்களுக்கு முன்னர், பிரதான உரத்தினைத் தயாரித்துக்கொள்ள வேண்டும். இதற்கு ரசாயன உரக் கலவை அவசியமாகும். நைட்ரஜன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் அடங்கிய உர வகைகள் இதற்கு உகந்தது. ஒவ்வொரு பழ வகையைப் பொறுத்தும் உரத்தின் அளவு மாறுபடும். பழக்கன்றினை நடுவதற்கு முன்பு இந்த உரக்கலவை குழியினுள் நிரப்பப்பட்ட மண்ணுடன் கலக்கப்பட வேண்டும்.



## பழக்கன்றினை நடுதல்

மழைக்காலம் ஆரம்பிக்கும்போது, பழக்கன்றினைப் பயிரிட வேண்டும். ஏப்ரல்-மே மற்றும் செப்டெம்பர்-ஒக்டோபர் மாதங்கள் இதற்கு உகந்தது. பொலித்தீன் உறைக்குள் குறித்த பழக் கன்று நடப்பட்டிருக்குமாயின், அதனை முறையாக உறைக்குள் இருந்து வெளியே எடுக்க வேண்டும். இதற்கென சிறிய கத்தியினைப் பயன்படுத்தலாம். இதன்போது, நடப்பட்டுள்ள பழக்கன்றுக்கும் மண் கலவையினுள் இருக்கும் அதன் வேர்களுக்கும் எந்தவொரு பாதிப்பும் ஏற்படக்கூடாது.

பொலித்தீன் உறையினுள் இருந்து நீக்கப்பட்ட பழக்கன்றினை தோண்டப்பட்டுள்ள குழியினுள் சரியாக நடுப்பகுதியில் நடுதல் வேண்டும். இங்கு பொலித்தீன் உறையினுள் இருந்த மண்ணின் அளவைவிட, ஆழமாகக் குழியினுள் கன்றினை நடுதல் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




குழியினுள் கன்றினை நாட்டி நன்கு மண் இட்டு நீர் ஊற்றுங்கள்.

## நடுவதற்கு உகந்த பழக்கன்றினைப் பெறுதல்

நடுவதற்கு உகந்த பழக்கன்றினைப் பெற்றுக்கொள்வதற்கு விவசாயத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்ற விவசாயப்பண்ணை அல்லது பதிவு செய்யப்பட்ட நிலையமே உகந்ததாகும்.

## நோய்களும் பூச்சிகள் பாதிப்பும்

அன்த்ரெக்னோஸ், ஃபியூசேரியம் மற்றும் கொளோட்ரோடிகம் போன்ற பூஞ்சை நோய்கள் பழமரங்களைத் தாக்கக்கூடும். பழமரங்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் சில பூச்சிகளும் உள்ளன. பழ ஈக்கள், வெண்மூட்டைப்பூச்சி, வெள்ளை ஈக்கள், இலைதின்னி மற்றும் கரப்பான்கள் போன்றவை முக்கியமானவை. இவற்றினால் பழமரங்களுக்கும் பூக்களுக்கும் அவற்றின் காம்புகளுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடும்.

## ஆரம்பகாலங்களில் மரத்திற்கு தேவைப்படும் நிழல்

வீட்டுத் தோட்டத்தில் நடப்பட்டுள்ள பழமரத்தினை அடிக்கடி ஆராய்ந்து பார்த்து பராமரிக்க வேண்டும். குறிப்பாக, மரம் தழைத்து வளர்வதற்கு நிழல் அவசியமாகும். அதிக வெப்பத்தினால் இளம் தாவரத்திற்குப் பாதிப்பு ஏற்படும். இதனால், தாவரம் மஞ்சள் நிறமாக மாறும். மங்குஸ்தான், தூரியன், றம்புட்டான் போன்ற பழமரங்களுக்கு நிழல் நேரடியாகத் தேவைப்படுகின்றது. இதற்குத் தாவரத்தினை சுற்றி தென்னை ஓலைகளை நடுவதன்மூலம் நிழலைப் பெற்றுக் கொடுக்கலாம். தாவரம் செழித்து வளரும்போது, நிழல் வழங்குவதைக் குறைக்க வேண்டும்.

## இடையூறுகளைக் கட்டுப்படுத்துதல்

பழச் செய்கையில் பெரும் பாதிப்பினை ஏற்படுத்தும் பழ ஈக்களில் இருந்து ஏற்படும் பாதிப்பினைத் தடுக்க பழமரத்தில் உள்ள நன்கு பழுத்த பழங்களை பொலித்தீன் பைகள் இட்டு மறைத்து வைப்பது உகந்தது. தவிர, மெல்லிய தாள்கள் அல்லது வர்ணத் தாள்களைப் பயன்படுத்தியும் பழங்களைப் பாதுகாக்க முடியும்.



## மரம் வளர உரம் அவசியம்


மரம் வளர்வதற்கு உரம் அவசியம். ஒவ்வொரு பழமரத்திற்கும் வெவ்வேறு அளவுகளில் உரம் தேவைப்படுகின்றது. மரத்தை நாட்டி ஆறு மாதங்களின் பின்னர் அல்லது ஓராண்டின் பின்னர் என உரம் இடும் கால அளவு வேறுபடும்.

மரம் வளர்ந்து காய்கள் காய்க்கும் போது, அதிகமான உரம் தேவைப்படும். மரங்களில் பூக்கள் பூக்கத் தொடங்கும்போதும் விளைச்சல் கிடைத்த பின்பும் உரம் இடுவது பொருத்தமானது. மரத்தினைச் சூழ உரத்தை இட்டு அதனை மண்ணுடன் கவனமாகக் கலவை செய்யப்பட வேண்டும். நைதரசன், பொஸ்பரஸ் மற்றும் பொட்டாசியம் உள்ளடங்கிய உரக் கலவையினை இடுவது அவசியமாகும்.

## மரத்தினை தயார்படுத்துதல்

பழமரம் ஒன்று நடப்பட்டு மூன்று அடி உயரத்திற்கு வளர்ந்த பின்பு, அதன் பழைய கிளைகளை வெட்டி அப்புறப்படுத்த வேண்டும். அப்பொழுதுதான் மரத்திற்கு நல்ல சூரியஒளி கிடைக்கும். சூரியஒளி நன்கு கிடைக்கும்போது, மரம் சிறந்த முறையில் உணவுத் தயாரிப்பினை மேற்கொள்ளும். அதன் போது மரம் மீண்டும் பூத்துக் காய்க்கத் தொடங்கும். இவ்வாறு மரம் காய்த்த பின்பு மேற்கூறிய செயல்முறையை ஒவ்வொரு முறையும் செய்வதனால் மரத்தில் நல்ல விளைச்சல் கிடைக்கும்.

-பிரியதர்ஷினி



# 'செறோ ஸ்ரீலங்கா'வின் பத்தாம் ஆண்டை முன்னிட்டு வெற்றியாளர் கௌரவிப்பு விழா...!

சமுதாயத்தின் கல்வி மட்டத்தினை மேம்படுத்துவதற்கான பல கல்விசார் நிகழ்ச்சித் திட்டங்களை பாடசாலை, பல்கலைக்கழகம் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் 'செறோ ஸ்ரீலங்கா' நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது.

சமூகசேவை அமைப்பான இந்த நிறுவனம், தனது பத்தாம் ஆண்டு நிறைவையொட்டி, அகில இலங்கை ரீதியாக நடத்திய கவிதை மற்றும் கட்டுரைப் போட்டியில் வெற்றியீட்டிய 280 பேரைக் கௌரவிக்கும் நிகழ்வு, ஏப்ரல் மாதம் 27 ஆம் திகதி சாய்ந்தமருது 'பெரடைஸ்' மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அமைப்பின் தலைவர் றினோஸ் ஹனீபா தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக அமைச்சர் அதாவுல்லாவும் விசேட அதிதியாக மாகாண சபை உறுப்பினர் ஆரிப் சம்சுடீன் மற்றும் ஏனைய பிரமுகர்களும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். இந்நிகழ்விற்கான ஊடக அனுசரணையை 'விஜய்' பத்திரிகை வழங்குகின்றது.

இப்போட்டியில் சிறப்புக் கட்டுரைகள் மற்றும் கவிதைகளை எழுதிய பத்துப்பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அவர்களின் விபரம் வருமாறு:

**கவிதைப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்:**

* எல்.எப்.சாஜிதா, கல்முனைக்குடி - 09 * அல்-ஹாஜ் கே.எம்.எ.அஸீஸ், சாய்ந்தமருது-11 * மு.ற.அமீருன் நிசா, நிந்தவூர் - 22 * செ.பிரஷாழினி, வீரமுனை, சம்மாந்துறை * என்.உ.பளீலா, மருதமுனை-06 * ரி.யாக்சானா, நற்பிட்டிமுனை, கல்முனை * எ.எச்.எ.ழாஹிர், மருதமுனை-03 * கு.கிலசன், நாவிதன்வெளி, கல்முனை * எம்.எஸ்.எப்.நத்வா, கல்முனைக்குடி-13 * ரபீக் இஹ்சானா, கல்முனைக்குடி-13.

**கட்டுரைப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்:**

* எஸ்.கிரிஷானா சுதாதரன், யாட் ரோட், கல்முனை * எம்.எப்.எம்.இன்பாஸ், நிந்தவூர் * சு.லெ.அனீஸா பர்வீன், சம்மாந்துறை * ஐ.எல்.எஃப். றிப்சானா, மலையடிக்கிராமம், சம்மாந்துறை * எல்.ரக்ஷாயினி, பாண்டிருப்பு, கல்முனை * எம்.எம்.எம்.இன்ஸாப், இறக்காமம் * எஸ்.எம்.ஹகீமா பீவி, சம்மாந்துறை * க.வேனுஷா, வீரமுனை, சம்மாந்துறை * எம்.எப்.பமீஸ், சிலாவத்துறை, மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர்களின் நெறிபிறழ்வு

நெறிபிறழ்வு என்பது சிறுவர்களின் அல்லது இளம் பருவத்தினரின் தீவிரமான சமூக விரோத நடத்தையைக் குறிக்கின்றது. இத்தகைய நடத்தையில் ஈடுபடும் பெரியவர்கள் குற்றவாளிகள் (Criminals) என அழைக்கப்படுகின்றனர். எனினும், நெறிபிறழ்வுள்ள சிறுவர்களும் இளங்குற்றவாளிகளேயாவர்.

1. இடர்தரும் நடத்தையுடைய சிறுவர்கள்.
2. நெறிபிறழ்வு சிறுவர்கள்.
3. குற்றவாளிகள்.

இந்த மூவகையினரும் சிறிதளவே வேறுபட்டவர்கள். பாடசாலையில் அடுத்த மாணவனின் புத்தகத்தைத் திருடுபவனை இடர்தரும் நடத்தை அல்லது பிரச்சினைக்குரிய நடத்தையுடையவன் என்று வகைப்படுத்தலாம். அதே மாணவன் வெளியே சென்று கடையிலுள்ள ஒரு பொருளைத் திருடினால் அவன் நெறிபிறழ்ந்தவனாகின்றான். வயதான மனிதன் ஒருவன் இதனைச் செய்தால், அவன் சமூகத்தில் குற்றவாளியாக கருதப்படுகின்றான்.

இங்கு நெறிபிறழ்வுள்ள சிறுவர்கள் யாவர்? என்பது பற்றி 'ஸ்ரில் பர்ட்' என்பவரது விளக்கம் கவனிக்கத்தக்கது. ''எக்குற்றங்களைப் பெரியவர்கள் செய்தால் அவர்கள் சட்டப்படி தண்டிக்கப்படுவார்களோ, அக்குற்றங்களை



செய்யும் பிள்ளைகளை நெறிபிறழ்வுடையவர்களாகக் கருதவேண்டும்'' என்கிறார். சாதாரணமாக, 18 வயதிற்குட்பட்ட பிள்ளைகளின் குற்றங்கள் நெறிபிறழ்வுக்குள் அடங்கும். நெறிபிறழ்வு சமூக உளவியல் (Social Psychology) காரணங்களால், எழும் பிரச்சினையே என்னும் உண்மையறிவு, தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. இத்தகைய பிரச்சினைக்குரிய மாணவர்களைச் சீர்திருத்தி அவர்களது வாழ்வையும் அதன்மூலம் சமுதாயத்தின் நலனையும் வளமாக்க எடுத்துக்கொள்ளப்படும் முயற்சிகள் நன்கு பயனளித்துள்ளன.

இத்தகைய பிள்ளைகளின் உண்மை நிலையை அறிந்து அவர்கள் மேம்பட உதவி செய்யாமல் சமுதாயம் தடுப்பதால், அப்பிள்ளைகளின் நெறிபிறழ்வு மேலும் தீவிரமடைகின்றது. நெறிபிறழ்வு பற்றியும் குற்றங்கள் பற்றியும் பல தவறான கருத்துக்கள் நிலவி வந்தபோதிலும், இத்தகைய கருத்துக்களைத் தற்கால உளவியலறிஞர்களும் (Psychologist) குற்றவியலறிஞர்களும் (Criminologist) முற்று முழுவதுமாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

(தொடரும்)

**தொகுப்பு :றினோஸ் ஹனீபா**
PgDPCS (UoC), LLB (Lon), BSW (NISD)

## தெரிந்து கொள்வோம்



* **1871 இல் இலங்கையின் முதலாவது சனத் தொகைக் கணிப்பு நடைபெற்றபோது, இலங்கையின் குடித்தொகை என்ன?**
  2.4 மில்லியன் (24 இலட்சம்)



* **ஐரோப்பாவின் மிகப்பெரிய துறைமுகம் எது?**
  நெதர்லாந்தின் ரோட்டர்டேம் துறைமுகம்



* **பிரித்தானிய அரச குடும்பத்தில் நீண்டகாலம் வாழ்ந்த பெண்மணி யார்? அவரை எவ்வாறு அழைத்தனர்?**
  'Queen mother' என அழைக்கப்பட்ட 101 வருடகாலம் வாழ்ந்த எலிசபெத் அஞ்சலா மார்க்ரெட் போவ்ஸ் லியோன் அம்மையார்

* **வருடத்தில் எப்போது பூமத்திய கோட்டில் இரவும் பகலும் சமமாகவுள்ள காலம் நிகழ்கின்றது?**
  மார்ச் மாதம் 21
  செப்டெம்பர் 21



* **இரத்ததானம் செய்பவர் 18-55 வயதிற்குட்பட்டவராக இருத்தல் வேண்டும். ஆனால், அவரது நிறை எவ்வளவாக இருத்தல் வேண்டும்?**
  110 இறாத்தல்



* **பின்வரும் உலகப் புகழ்பெற்ற இடங்கள் எங்குள்ளன?**
  I பென்டகன் - நியூயோர்க் - அமெரிக்கா
  II பிக்பென் - ஐக்கிய இராச்சியம் - லண்டன்


SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் பேச வேண்டுமா?

உங்கள் Dialog தொலைபேசியில் தமிழ் மூலம் SMS ஊடாக ஆங்கிலம், சிங்களம் கற்றுக்கொள்ளவும் மேலும் முக்கிய செய்திகள், கல்வி, வாழ்க்கை வழிகாட்டல்கள், Tips (தகவல் தொழில்நுட்பத் துளிகள்), பொது அறிவுத் தகவல்கள், இலங்கையின் அடிப்படைச் சட்டங்கள், மருத்துவ மற்றும் ஆரோக்கியத் துணுக்குகள், அரச வேலைவாய்ப்புகள் என மேலும் பல்வேறுபட்ட விடயங்களை பெற்றுக்கொள்ள அருகில் காட்டப்பட்டவாறு செயற்படுத்தவும்





படத்தை இங்கே ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்: ..................................................

முகவரி: ..................................................

..................................................

பாடசாலை: ..................................................

வகுப்பு: ..................................................

திகதி: ..................................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு

## விஜய் மாணவர் கழகம்



அங். இல: 5092
ப.ரேகா, கூமாங்குளம், வவுனியா.



அங். இல: 5093
ஜே.ஜெய்ஷான், பிரதான வீதி, கல்முனை.



அங். இல: 5094
என்.எஃப்.நுஹறா, கும்பலங்க, இப்பாகமுவ.



அங். இல: 5095
அல்தாப் அலி அக்பர், தல்கஸ்பிடிய, அம்பகொட.



அங். இல: 5096
வி.ஷறோமி, கண்டி வீதி, சுண்டுக்குளி.



அங். இல: 5097
கே.எம்.ஃபர்சாத், உடுதெனிய, மாரஸ்ஸன.



அங். இல: 5098
ஐ.எம்.ஹனீப், இகலகினியம, வீரபொகுண.



அங். இல: 5099
எஸ்.எஃப்.சஸ்னா, குரீகொடுவ, பஹாமுன.



அங். இல: 5100
எஸ்.கனிசியஸ் ராஜ், ஆஸ்பத்திரி வீதி, மன்னார்.



அங். இல: 5101
நெ.மேரி அருள் இசையரசி, குருநகர், யாழ்ப்பாணம்.



அங். இல: 5102
மு.தனுசன், கொக்குவில் கிழக்கு கொக்குவில்.




அங். இல: 5103
நிஃமத் நயீம், இப்னு பதூதா வீதி, புத்தளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமியின் அளவிலான 1700 கோடி கிரகங்கள்

பூமியின் அளவினை ஒத்ததாக சுமார் 1700 கோடி கிரகங்கள் இருப்பதற்கான அறிகுறிகளை நாஸா விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். கலிஃபோர்னியாவில் உள்ள அமெரிக்க விண்ணியல் ஆராய்ச்சிக் குழுவிடம் இந்த ஆய்வறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.





பூமியை ஒத்த அளவில் ஏராளமான கிரகங்கள் இருந்தாலும், இவற்றில் பெரும்பாலானவை உயிர்கள் வாழ முடியாத அளவுக்கு அதிக வெப்பம் கொண்டவையாக இருப்பதாக விஞ்ஞானிகள் சுட்டிக்காட்டியுள்ளனர். பொதுவாக, ஒரு கிரகத்தில் உயிர்கள் வாழ்வதற்கு, அங்கு திரவ வடிவில் நீர் இருக்க வேண்டும். ஆனாலும், தற்போது பிரபஞ்சத்தில் இருப்பதாக நம்பப்படும் ஆயிரம்கோடிக் கணக்கிலான மேற்படி கிரகங்களில் ஒன்றேனும் பூமியைப் போன்று உயிர்கள் வாழ்வதற்கு ஏற்ற அம்சங்களைக் கொண்டதாக இருக்கிறதா? என்பது குறித்து வானியலாளர்கள் கண்டறிவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது.

நமது சூரியனைப் போன்ற அளவுகொண்ட நட்சத்திரங்களை நாஸாவின் 'கெப்லர்' விண்வெளி தொலைநோக்கி ஆராய்ந்தது. இதன்போதே, பூமியின் அளவிலான சுமார் 1700 கோடி கிரகங்கள் இருப்பதற்கான அறிகுறிகள் கண்டறியப் பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.


# செவ்வாய் கிரக பாறைக்குள் களிமண்





அமெரிக்காவின் நாஸா விண்வெளி ஆய்வு மையத்தினால் செவ்வாய் கிரகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள கியூரியோசிடி தளவூர்த்தியானது, பாறைகளை துளையிட்டு ஆய்வு செய்துள்ளது: இந்த ஆய்வின்போது, பாறைக்குள் களிமண் வடிவில் தாதுப்பொருட்கள் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

களிமண் இருந்தால் அங்கு நீர் இருக்கிறது என்றுதான் அர்த்தம். அதற்கமைய, தற்போது களிமண் வடிவில் கிடைக்கப்பெற்றுள்ள தாதுப் பொருட்கள் செவ்வாய் கிரகத்தில் நீர் இருப்பதற்கான முக்கிய ஆதாரமாக அமைந்துள்ளது. ஆகவே, அங்கு மனிதர்கள் குடியேறுவதற்கான வாய்ப்பு அதிகரித்துள்ளது என்று நாஸா தெரிவித்துள்ளது.







# வேலைகளை முறைப்படி செய்தால் கற்றலுக்குத் தடை ஏற்படாது

நேரத்தை முகாமை செய்வது என்பது, வேலைகளை அதன் கால அளவுக்கு ஏற்ப பிரித்து, செயற்படுவதும் குறிப்பிட்ட ஒரு வேலையை செய்து முடிக்க அதற்குரிய நேரத்தை ஒதுக்கி, நேரத்தைக் கழிப்பதில் மிகுந்த அவதானத்துடன் இருப்பதுமாகும். நேரத்தை முகாமை செய்வதன் பிரதான நோக்கம், அன்றாட வேலைகளை குறித்த நேரத்தில் முறைப்படி செய்து வருவதற்காகும்.

வேலைகளை அன்றாடம் நேர முகாமைத்துவத்துடன் செய்து வருவது என்பது, மிகச் சிறந்த ஆளுமைக்கு எடுத்துக்காட்டாகும். மாணவர்களைப் பொறுத்தவரையில், இது சிறந்த பயன்பாட்டைக் கொடுக்கும்.



கற்றல் என்பது, நேர முகாமைத்துவத்துடன் பின்னிப் பிணைந்த அம்சமாகக் காணப்படுவதால், அதன் அடிப்படையும் செயன்முறையும் உரியவாறு பேணப்பட வேண்டும்.

மாணவர்களுக்கிருக்கும் அன்றாட வேலைகள் என்று கூறும்போது, அது பெரும்பாலும் கற்றலோடு தொடர்புடையதாகவே இருக்கும். ஏனையவை வாழ்வியலோடு தொடர்புடையதாகவும் அல்லது தனது உடல், உள,சமூக தேவைகளோடு இணைந்த அம்சங்களாகவும் இருக்கும். இத்தகைய கட்டாய அம்சங்களின் ஒரு பகுதியாகவே கற்றலும் காணப்படுகின்றது. அந்தவகையில், கற்றலும் ஓர் உளவியல் தேவைதான். அத்தேவையை அனைத்து மாணவர்களும் கொண்டிருந்தாலும், அதனை எப்படி அடைய வேண்டும்?, எவ்வாறு செயற்படுத்த வேண்டும்? என்பதில்தான் மாணவர்கள் வெவ்வேறு விதமாகச் சிந்திக்கிறார்கள்.

எனினும், அடிப்படைத் தேவைகளை நிறைவேற்ற முற்படுகையில், அதனோடு அண்மித்த கற்றல் தேவைக்கு பங்கம் ஏற்படா வண்ணம் தேவைகளைப் பூர்த்தி செய்துகொள்ள வேண்டும். அதன்படி, மாணவர்கள் கற்கும் பருவத்தில் பாடசாலைக்கு செல்வது முதல், அன்றிரவு நித்திரை செய்யும் வரையிலும் நேரத்தைக் கருத்தில்கொண்டு செயற்பட வேண்டும். அன்றாட வேலைகளை உரிய ஒழுங்கின்படி செய்துவரவும் வேண்டும். அன்றாட வேலைகளை செய்துவரும் அதேவேளை, ஒவ்வொரு வேலைக்கும் இடையிடையில் சிறிதளவு ஓய்வு நேரத்தையும் ஒதுக்கிக்கொள்ள வேண்டும். இவ்வாறு செய்வதால் மூளை களைப்படையாமலும் அதன் சக்தி விரயமாகாமலும் பேண முடியும். இவ்வாறு அனைத்தையும் திட்டமிட்டு செயற்படுத்தி வந்தால், காலத்தை வெகு சிறப்பாகப் பயன்படுத்த முடியும்.



எம்.ஏ.எஃப்.சப்ரானா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வினாத்தாள் - II (சென்ற வாரத் தொடர்ச்சி)

பெயர்: ................................................ நேரம்: 45 நிமிடங்கள்

08.  தரப்பட்ட சதுரத்திற்கு சமச்சீர் அச்சுக்கள் யாவற்றையும் வரைந்து காட்டுக.

09. $\frac{2}{3}$ இற்கு சமவலுப் பின்னம் மூன்று தருக. .........., ........., ..........

10. 

i) தரப்பட்ட உருவின் பெயர் யாது?..........................................


ii) இவ்வுருவின் விளிம்புகளின் எண்ணிக்கை யாது?....................

iii) இவ்வுருவின் உச்சிகளின் எண்ணிக்கை யாது?.........................

iv) முகங்களின் எண்ணிக்கை யாது?..............................................

11. 8 மீற்றர் நீளமுள்ள கயிற்றை இரு சம பகுதிகளாக வெட்டி, அவற்றின் ஒரு பகுதி மீண்டும் இரு சமபகுதிகளாக வெட்டப்பட்டது எனின், ஒரு பகுதியின் நீளம் எத்தனை மீற்றர், எத்தனை சென்றிமீற்றர்?

----------- m ---------- cm


12. 

i இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?...................................

ii இவ்வுருவிலுள்ள செங்கோணங்களிலும் குறைந்த கோணங்களின் எண்ணிக்கை, ..................................

iii செங்கோணங்களிலும் கூடிய கோணங்களின் எண்ணிக்கை யாது? ..............................

iv இவ்வுருவில் செங்கோண முக்கோணிகளின் எண்ணிக்கை யாது? ..............................

13. 

i) இவ்வுருவின் சுற்றளவு யாது? .................................

ii) இவ்வுருவின் பரப்பளவு யாது? ..............................

14. விரித்து வைக்கப்பட்ட ஒரு புத்தகத்தின் வலப்பக்கத்திலுள்ள பக்க எண் 399 ஆகும். அடுத்ததாக புரட்டும்போது வரும் பக்கங்கள் இரண்டினதும் எண்கள் முறையே..................................................

15. நான் கடைக்குச் சென்று ரூபா 47.50 விலையுள்ள புத்தகமொன்றும் ரூபா 13.25 விலையுள்ள பென்சிலும் ரூபா 10.00 கொடுத்து அடிமட்டமும் வாங்கினேன். கடைக்காரரிடம் ரூபா 100.00 கொடுத்தேன். எனின், எனக்கு மிகுதியாகக் கிடைக்கும் பணம் எவ்வளவு?

✱ உமது நண்பன் மிகவும் சிறந்தவன் எனக் கூறும் நீர், அதற்கான வலுவுள்ள ஐந்து காரணங்களைக் கூறுக.

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................

..............................................................................................




## விடைகள் பகுதி -II

(17, 24 ஆம் திகதிகளில் பிரசுரமானவை)

01) 1. கடலலைகள் 2. அழகிய
3. (i) நட்சத்திரங்கள் (ii) நிலா
4. (i) கதிரவன், ஆதவன் (ii) சமுத்திரம், ஆழி
5. பகல் வேலை
6. நட்சத்திரங்கள் மின்னி மின்னி ஒளிர்கின்றன.

02) 1. நூற்றாண்டு விழா 2. தீர்ப்பு

03) 1. அடிமை 2. ஊதாரி 3. அந்தப்புரம்

04) (i) உங்களால் எனக்கு உதவ முடியுமா?
(ii) நான் சொல்வதை தயவுசெய்து கவனியுங்கள்.

05) (i) அது நல்ல வேளை
(ii) தயவு செய்து வெளியே போகவும்.

06) (i) Clock (ii) Table

07) மகே பொத கொஹெத

08) இது எமது பாடசாலை


09) (i) பூமி (ii) புராதனம் (iii) நூல்

✱ 1. அந்தூரியம் 2. நீலவேம்பு
3. நத்தை 4. வயிற்றுளைவு
5. நாகதாளி 6. வண்டுகளைக் கவர
7. கைப்பலகை 8. மீன்பிடிக்க
9. மேற்கூறிய யாவும் 10. முற்சந்தி முன்னால்
11. சிவப்பு

✱
1. 30250
2. 450,349
3. (i) 
(ii) 6/8
4. 550g
5. 1l 880ml
6. 20
7. 88kg
8. 
9. 6/9, 4/6, 8/12
10. (i) நான்முகி (ii) 6 (iii) 4 (iv) 4
11. 2m 200cm
12. (i) 2 (ii) 4 (iii) 1 (iv) 1
13. (i) 26m (ii) $12m^2$
14. 400, 401
15. ரூபா 29.25


## வினாத்தாள் - I

01) பின்வருவனவற்றில் சமச்சீர் அச்சைக் காட்டாத உருவம் எது?




02) பின்வருவனவற்றில் நூறினிடத்தில் இலக்கம் 9 வரும் எண் யாது?


1. 9543 2. 1956 3. 7591 4. 5429

03)  இவ்வுருவினை ஆக்கத் தேவையான நேர்கோடுகளின் எண்ணிக்கை யாது?

1. 9 2. 6 3. 12 4. 2

04) உருக்கள் அமைந்துள்ள கோலத்திற்கு ஏற்ப வெற்றிடமாகவுள்ள கூட்டிற்குப் பொருத்தமான உருவை தெரிவுசெய்க.





மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிஜிட்டல் கெமரா வாங்கப்போகிறீர்களா?

## உங்களுக்கு உதவ ஓர் இணையத்தளம்



புகைப்படம் எடுப்பது பலருக்கும் பொழுதுபோக்காக இருந்தாலும், பல நேரங்களில் நமது தேவைக்கு ஏற்ற-சிறந்த கெமரா எதுவென்று தெரியாமல், ஏதாவதொரு கெமராவை வாங்கிவிடுவோம். பின்னர்தான் அது குறித்து சிக்கல்களை எதிர்கொள்வோம். இப்படியான சிக்கல்களுக்குத் தீர்வு தரவும் சிறந்த டிஜிட்டல் கெமரா எது என்று நாம் அறிந்துகொள்ளவும் ஓர் இணையத்தளம் உள்ளது. அந்த இணையத்தளத்தின் முகவரி http://snapsort.com என்பதாகும்.

உங்கள் தேவைக்கேற்ப அல்லது உங்களுக்கு எத்தகைய வசதிகளைக் கொண்ட கெமரா தேவை, என்ன தேவைக்காகப் பயன்படுத்தப்போகிறோம், விலை எவ்வளவுக்குள் இருக்க வேண்டும் போன்ற விபரங்களைக் கொடுத்து இத்தளத்தில் தேடினால், பல வகையான நிறுவனங்களின் கெமராவை இத்தளம் உங்களுக்குக் காட்டும். மேலும், ஒவ்வொரு கெமராவிலும் இருக்கும் சிறப்பம்சம் என்ன என்பதைக் கூறி, அதை ஏனைய நிறுவனங்களின் கெமராவுடன் ஒப்பிட்டும் காட்டும்.

அத்துடன், தற்போது சந்தையில் இருக்கும் அனைத்து வகையான கெமராக்களையும் நாம் இத்தளத்தில் சென்று தேடலாம். அத்துடன், சில கெமராக்களின் செயற்பாட்டு வீடியோக்கள்கூட இத்தளத்தில் இணைக்கப்பட்டிருக்கின்றன. நீங்களும் ஒருமுறை இத்தளத்திற்கு விஜயம் செய்துதான் பாருங்களேன்.







இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.

விஜய் நுட்பம்

எஸ்.பிரதீப்



# Skype பாவனையின் அதிரடி வளர்ச்சி

## தினமும் 2 பில்லியன் நிமிடங்கள்!




உலகின் பிரபல தொடர்பு ஊடகங்களில் ஒன்றான 'Skype', நாளொன்றுக்கு 2 பில்லியன் பாவனை நிமிடங்கள் என்ற இலக்கை ஏப்ரல் மாதத்தில் எட்டியிருக்கிறது. இந்தத் தகவல் அவர்களது உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

2 பில்லியன் நிமிடங்கள் எனும்போது, அது சுமார் 33 மில்லியன் மணித்தியாலங்கள் அல்லது 1.38 மில்லியன் நாட்கள் அல்லது 3,805 வருடங்களுக்கு சமமாகிறது. ஆக, ஒரு நாளைக்கு Skype இல் பாவனையாளர்கள் செலவிடும் நேரம் 3,805 வருடங்கள்!!

2003 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்ட Skype, 2005 இல் eBay யினால் வாங்கப்பட்டது. விற்பனையாளர்களுக்கும் கொள்வனவாளர்களுக்குமிடையே வாய்மூல வர்த்தக நடவடிக்கையை முன்னெடுக்க உதவும் என்ற நோக்கிலேயே eBay யினால் வாங்கப்பட்டது. எனினும், அந்த முயற்சியில் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. இதனால், 2009 இல் இதன் 70 சதவீத பங்குகள் தொழில்நுட்ப முதலீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன. இந்த நிலையில், 2011 இல் Microsoft நிறுவனம் 8.5 பில்லியன் டொலர்களுக்கு Skype ஐ வாங்கியது. அதன் பின்னர் Skype இனைச் சந்தைப்படுத்துவதிலும் தன்னுடைய பல்வேறு தயாரிப்புக்களில் உட்புகுத்துவதற்கும் முயற்சித்து அதில் ஓரளவு வெற்றியும் கண்டிருக்கிறது Microsoft.




இன்று கணினிகளில் மட்டுமல்லாது iPhones, iPads, Kindle Fires, Androids, Macs, Windows Phones உட்பட, நவீன தொலைக்காட்சிகளிலும் Skype இனை நாம் பயன்படுத்திக் கொள்ளலாம் என்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமல்லாமல், Microsoft இன் ஆரம்பத் தயாரிப்புக்களில் ஒன்றான Windows Messenger சேவையை நிறுத்திவிட்டு, அதன் பயனாளர்களை Skype இற்கு மாற்ற இருப்பதாக வெளியாகியிருக்கும் தகவலானது, Skype மென்மேலும் உயரே செல்லவிருப்பதையே முன்னறிவிக்கின்றது எனலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஃபேஸ்புக்கில் Tag செய்திருப்பதை Timeline இல் தெரியாமல் தடுக்க என்ன வழி?



(படம் 1)

Facebook இல் பிறர் நம்மை Tag செய்த புகைப்படங்கள் மற்றும் பதிவுகள் என்பனவற்றை, நம் அனுமதி இல்லாமல் Timeline இலோ, நண்பர்களுக்கோ தென்படுவதைத் தடுக்கலாம். அதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை இங்கு பார்ப்போம்.

முதலில் உங்கள் Facebook கணக்கில் Account Settings என்ற பகுதிக்குச் செல்லுங்கள். (படம் 1)

அங்கே இடதுபுறமாக இருக்கும் Timeline and Tagging என்பதைக் க்ளிக் செய்யுங்கள். (படம் 2)


அங்கே Who can add things to my timeline? என்ற இடத்தில், இரண்டாவதாக உள்ள Review posts friends tag you in before they appear on your timeline? என்பதைக் க்ளிக் செய்யுங்கள். (படம் 3)



(படம் 3)



(படம் 4)




(படம் 2)

அதில் Enabled என்பதைக் க்ளிக் செய்யுங்கள் (படம் 4). அவ்வளவுதான்....

இனி, யாராவது உங்களை Tag செய்தால், அதுபற்றி உங்களுக்கு அறிவிப்பு வரும். அதை க்ளிக் செய்தால் Timeline Review பகுதிக்குச் செல்லும்.

அங்கே இரண்டு buttonகள் இருக்கும். Add to Timeline என்பதைக் க்ளிக் செய்தால், உங்கள் Timeline ல் தெரியும். அதுவே, Hide என்பதை க்ளிக் செய்தால் தெரியாது.






# புதிய முறையில் மின்னஞ்சல் அனுப்புவதைக் கட்டாயமாக்குகிறது Gmail


கடந்த 2012 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில், எளிதாக mail அனுப்புவதற்கான புதிய வசதியை (New Compose) Gmail அறிமுகப்படுத்தியது. அது முதலில் விருப்பத் தேர்வாக, அதாவது நீங்கள் விரும்பினால் பயன்படுத்தலாம் என்ற அடிப்படையிலேயே இருந்தது. எனினும், தற்போது அனைவரும் இந்த வசதியை கட்டாயமாகப் பயன்படுத்தவேண்டிய வகையில் Gmail அதனை மாற்றியுள்ளது.

நீங்கள் Gmail இற்கு உள்நுழையும்போதே, இது பற்றிய அறிவிப்பு தென்படும். அதில் Continue என்பதைக் கொடுத்து நீங்கள் இந்த வசதியைப் பயன்படுத்தலாம்.




இந்த புதிய முறையில், Compose என்பதை க்ளிக் செய்தால், Pop-Up விண்டோவில் நீங்கள் mail அனுப்பலாம். விண்டோவின் கீழே, முன்புபோல mail இல் உள்ள வசதிகள் இருக்கும். அவற்றினைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.


இந்த புதிய முறை உங்களுக்குப் பிடிக்கவில்லை என்றால், தற்காலிகமாக More Options button ஐக் க்ளிக் செய்து, 'Temporarily switch back to old compose' என்பதைக் க்ளிக் செய்து பழைய முறைக்கு மாறிக்கொள்ளலாம். ஆனால், தற்காலிகமாக மட்டுமே இவ்வாறு நீங்கள் மாறலாம்.





விரைவில் பழைய முறையை Gmail முற்றிலுமாக நீக்கவுள்ளதாகத் தெரிகிறது.

எனினும், தற்போதுள்ள Pop-Up முறையில் மின்னஞ்சல் அனுப்புவது பயனர்களில் பலருக்குத் திருப்தியளிக்காத ஒரு முறையாக இருப்பதாகவே கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன. Gmail இதற்கு என்ன செய்யப்போகிறது என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Photoshop மென்பொருளுக்கு மாற்றீடாக... Paint.net




Photoshop மென்பொருளானது, படங்களை edit செய்யவும் உருவாக்கவும் பயன்படும் மிக முக்கிய மென்பொருளாகும். இதற்கு மாற்றீடாக, இணையத்தில் ஏகப்பட்ட மென்பொருட்கள் கிடைக்கின்றன. அவற்றில் மிக முக்கியமான ஒன்றுதான் Paint.net என்பதாகும். இது எளிமையான ஒரு மென்பொருள் ஆகும்.

இதன் Tools bar இல் உள்ள கூறுகள் அனைத்துமே மிக எளிதாக, பார்த்தவுடன் புரிந்துகொள்ளும் வண்ணம் இருக்கின்றன. மிக எளிதான படங்களை திருத்தம் செய்யும் வேலைகளுக்கு இது மிகவும் பயன்படுகின்றது. முக்கியமாக Crop, Rotate, Resize images, Adjust colors, Collages போன்றவற்றைச் செய்வதற்கு மிகவும் உகந்தது. அதேபோல, இதில் History, Layer, Colors, Tools என எல்லாவற்றுக்கும் தனித்தனி Option களும் உள்ளன. Special Effect கள் பயன்படுத்துவோருக்கு blurring, sharpening, red-eye removal, distortion, noise, embossing போன்றவையும் உள்ளன.



திறந்த மூல மென்பொருள் (Open Source Software), மிக எளிதான Interface, Screenshot Image களை Edit செய்யும் வசதி, வேகமான செயற்திறன், தன்னியக்க மேம்படுத்தும் வசதி, எளிமையாகப் பயன்படுத்தக்கூடிய Special Effects போன்றவற்றினால் இந்த மென்பொருள் தனித்துவம் மிக்கதாக இருக்கிறது.

http://www.dotpdn.com/downloads/pdn.html என்ற இணைப்புக்குச் சென்றால், இதனை இலவசமாகப் பதிவிறக்கம் செய்யலாம்.

paint.net



# Mozilla நிர்வாக இயக்குநர் பதவி விலகுகிறார்!



Mozilla நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான Gary Kovacs, இந்த வருட இறுதிக்குள் தனது பதவியிலிருந்து விலகத் தீர்மானித்திருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

John Lilly இற்கு அடுத்ததாக கடந்த 2010 ஆம் ஆண்டு நிர்வாக இயக்குநர் பதவிக்கு வந்த Gary Kovacs, தற்போதுள்ள பதவி தனக்குத் திருப்தி அளிக்கின்றபோதிலும், வர்த்தக ரீதியில் இன்னும் தீவிர பணிகளில் ஈடுபடவிருப்பதால், இந்தப் பதவியிலிருந்து விலக நினைப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

Bugzilla

Mozilla நிறுவனமானது, தற்போதளவில் மொபைல் தொழில்நுட்பத்தில் தனது ஆதிக்கத்தினை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இந்த முயற்சியின் சில முக்கிய கட்டங்களில் Gary Kovacs இனது முழுமையான ஈடுபாடு தேவைப்படுவதே, அவரது பதவி விலகலுக்கான முக்கிய காரணம் என்று உள்ளகத் தகவலொன்று தெரிவிக்கின்றது.

Gary Kovacs நிர்வாக இயக்குநர் பதவியிலிருந்து விலகத் தீர்மானித்திருந்தாலும் தொடர்ந்தும் நிறுவனத்தின் இயக்குநர் குழாமில் இருப்பார் என்றே தெரிகிறது.

இணைய உலாவியாக மட்டுமே பலராலும் அறியப்பட்ட Mozilla, கணினி உலகின் பல்வேறு துறைகளிலும் கால்பதித்து நிலைபெற்றுள்ளது. இதன் பெரும்பாலான சேவைகள் இலவசமாகவே வழங்கப்பட்டு வருவதனால், உலகெங்கும் கோடிக் கணக்கான பாவனையாளர்களை இது கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.


Thunderbird


mozilla Webmaker

mozilla Firefox


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஜய் 2013, ஏப்ரல், 24, புதன்கிழமை V






# இணைய உலாவியில் வேகமாக செயற்பட சில சுலப வழிகள்



நாம் இணையத்தில் தகவல்களைப் பெறவும் அனுப்பவும் உறுதுணையாக இருப்பவை 'இணைய உலாவிகள்' (Internet Browsers) ஆகும். இணைய உலாவிகளில் உள்ள Key-board Shortcut தெரிந்தால், இணைய செயற்பாடுகளில் எம்மால் இலகுவாகவும் வேகமாகவும் செயற்பட முடியும்.

அந்தவகையில், Internet Explorer, Firefox, Google Chrome, Opera, Safari ஆகிய இணைய உலாவிகளுக்கான Shortcut key கள் இங்கே தொகுத்துத் தரப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தி இணையத்தில் இலகுவாகவும் வேகமாகவும் கருமமாற்றுங்கள்.




**Ctrl+N:** புதிய விண்டோவை Open செய்வதற்கு.

**Ctrl+T:** புதிய Tab ஐ Open செய்வதற்கு.

**Ctrl+W:** தற்போது திறந்துள்ள Tab ஐ மூடுவதற்கு.

**Ctrl+D:** பார்த்துக்கொண்டிருக்கும் இணையத்தளத்தை Bookmark செய்வதற்கு.

**Ctrl+H:** உங்கள் உலாவியின் History ஐப் பார்ப்பதற்கு.

**F5:** திறந்திருக்கும் இணையப்பக்கத்தை Refresh செய்வதற்கு.

**Ctrl+F5:** வன்மையான Refresh அதாவது, பார்த்துக்கொண்டிருக்கும் இணையப்பக்கத்தின் Cache எல்லாவற்றையும் நீக்கிவிட்டு, அந்த இணையப்பக்கத்தின் புதிய பிரதியினைத் தரும்.

**Ctrl+L** அல்லது **Alt+D** அல்லது **F6** (இந்தக் கட்டளை Opera வில் வேலை செய்யாது): திறந்திருக்கும் இணையப்பக்கத்தின் முகவரியை Address bar இல் Highlight செய்வதற்கு உதவும்.






**Ctrl+E:** இது உங்கள் Cursor ஐ Browser இன் Search bar இற்கு நகர்த்தும்.



**Ctrl+F:** நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கும் இணையப் பக்கத்தில் இருக்கும் ஏதாவது ஒரு சொல்லைத் தேடுவதற்கு உதவும்.

**Ctrl+(+/-):** இந்தக் கட்டளைகள் பார்க்கும் இணையப் பக்கத்தினை முறையே Zoom செய்து பெரிதாக்குவதற்கும் சிறிதாக்குவதற்கும் உதவும்.

**Ctrl+C** அல்லது **Ctrl+V:** இந்தக் கட்டளைகள் முறையே Copy செய்வதற்கும் Paste செய்வதற்கும் உதவும்.

**Home/End:** இந்தக் கட்டளைகள் முறையே பார்க்கும் இணையப் பக்கத்தின் தொடக்கத்திற்கும் முடிவுக்கும் செல்வதற்கு உதவும்.

**Ctrl+U:** நீங்கள் பார்த்துக்கொண்டிருக்கும் இணையப் பக்கத்தின் Source Code ஐப் பார்ப்பதற்கு உதவும்.

**Ctrl+Click** (இந்தக் கட்டளை Opera வில் வேலை செய்யாது): இணையப் பக்கத்தில் இருக்கும் ஏதாவது ஒரு Link ஐ Ctrl ஐ அழுத்திக் கொண்டு Click செய்யும்போது அந்த link ஆனது புதிய Tab இல் திறக்கும்.



**Ctrl+left Click** (இந்தக் கட்டளை Opera வில் மட்டும் வேலை செய்யும்): நாம் பார்க்கும் படங்களை Save செய்வதற்கு, அதாவது இணையப் பக்கத்தில் இருக்கும் Image ஐ Right Click செய்து Save செய்வதற்குப் பதிலாக Opera இல் Ctrl ஐ அழுத்திக் கொண்டு அந்த Image ஐக் Click செய்தால் அந்த Image ஆனது Save ஆகும்.



**Ctrl+Shift+T:** பார்த்துவிட்டுக் கடைசியாக மூடிய Tab ஐ மீளத் திறக்க முடியும்.

**Ctrl+Enter:** http://www.,.com என Type செய்து நேரத்தை செலவழிக்காமல் இணையத்தளத்தின் பெயரை Type செய்துவிட்டு Ctrl+Enter அழுத்தினால் http://www.,.com என்பனவற்றை Browser ஆனது தானாகவே போட்டுக்கொள்ளும். உதாரணமாக, http://www.yahoo.com/ என Type செய்வதற்குப் பதிலாக, yahoo என Type செய்து Ctrl+ Enter ஐ அழுத்துதல் வேண்டும்.

**Shift+Enter:** http://www.,.net என்பவற்றை இலகுவாக அடைய உதவும்.

**Ctrl+Shift+Enter:** http://www.,.org என்பவற்றை இலகுவாக அடைய உதவும்.

ஆகவே, இந்த Shortcut key களைப் பயன்படுத்தி இணையத்தில் உலாவுங்கள். இணையத்தில் செலவிடும் நேரத்தைப் பயனுள்ளதாக்குங்கள்!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுநர்/வாங்கி /நுகர்வோர்/பயனாளி









தொடர்பாடுபவரால் வழங்கப்படுகின்ற அல்லது முன்வைக்கப்படுகின்ற செய்தியை பெறுபவர் 'பெறுநர்' என அழைக்கப்படுகின்றார்.

பெறுநர் எப்பொழுதும் பெறுநராக தொடர்பாடல் செயன்முறையில் இருக்க மாட்டார். சந்தர்ப்பங்களுக்கு ஏற்ப பெறுநர் தொடர்பாடுபவராகவும் மாற்றத்திற்குள்ளாவார்.

அவ்வாறே அச்சு ஊடகத்தை வாசிப்பவர்-வாசகர், வானொலியை செவிமடுப்பவர் - நேயர், தொலைக்காட்சியைப் பார்ப்பவர் - ரசிகர், நவீன ஊடகத்தைப் பயன்படுத்துகின்றவர் - பாவனையாளர் என பெறுநர்கள் குறிப்பிடப்படுகின்றனர். குறித்த செய்தி பெறுநரிடத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றபொழுது, அவர் எதிரூட்டல்/பின்னூட்டலை வழங்க முனைவதன் ஊடாக, தொடர்பாடல் செயன்முறைச் சக்கரம் சுழற்சிக்குட்படுகின்றது.




பெறுநரின் இயல்பை அறிந்து தகவல் தொடர்பு செயன்முறையை முன்னெடுத்தல் சிறந்த தொடர்பாடுபவரின் இயல்பாக அமைகின்றது. தகவல் தெளிவாக முன்வைக்கப்படுகின்றபொழுது பெறுநருக்கு அவற்றை உள்வாங்கிக் கொள்வது இலகுவானதாக அமைகின்றது.

பெறுநர் உணர்ச்சி வசப்படுதல், பக்கம் சார்தல், திரிவுபடுத்திக் கூறல், உண்மைகளை மறுதலித்தல், பொறுமையின்றிச் செயற்படல், மறந்துபோதல், விளக்கமளித்தலை தவறாக செவிமடுத்தல் போன்ற நிலமைகளை தவிர்த்துக்கொள்ளல் பயனுறுதி மிக்க பெறுநராக மாற்ற உதவும். பெறுநரின் பழக்கவழக்கம், நடத்தை, சிந்தனைகள், பலம், பலவீனங்கள், சமூகப் பின்னணி, தேவைகள், விருப்புகள் ஆகியவற்றை அறிந்து தொடர்பாடலை திட்டமிடுகின்றபொழுது தொடர்பு செயன்முறை வலுவுள்ளதாக அமையும்.

பெறுநர் தொடர்புச் செயன்முறையில் ஈடுபடுகின்றபோது உடல், உளரீதியில் முன்னாயத்தப்படுத்தல், ஆர்வம், செவிமடுத்தல், கிரகித்தல், திறன்களை வலுவுள்ளதாக்கல், கருத்தை உள்ளவாறு தெளிவாக துணிவுடன் முன்வைத்தல் போன்ற செயன்முறைகள் பெறுநரின் செயற்பங்கை அதிகரிக்கச் செய்யும்.


ஊடக நிறுவனங்கள், தொடர்பாடுபவர் தொடர்பாடல் கருமங்களை முன்வைக்க முனைகின்றபொழுது, பெறுநர்களின் துலங்கல் வெளிப்பாட்டை ஆய்வுசெய்து அவர்களின் விருப்பம், தேவைகளுக்கு ஏற்ப ஊடக மற்றும் தொடர்பாடல் செயற்பாடுகளை முன்னெடுக்கின்றபோது, பயனுறுதி மிக்க தொடர்பாடல் கருமமாக மாற்றம் பெறும்.



(தொடரும்)


**பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்**
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.

# தளிர்கரம்




புள்ளிகளை இணைத்து உருவைக் காண்க.

இடைவெளிகளில் வரவேண்டிய பொருத்தமான இலக்கத்தை எழுதுக.




ஒவ்வொரு வரிசையிலும் பெரிய உரு எது என்பதைக் கண்டறிந்து அதனைச் சுற்றி வட்டமிடுக.





மேலே உள்ள படத்தைப் பார்த்து கீழே உள்ள கட்டங்களில் வரைக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் தபாலகத்தில் அனிலுக்கும் தபாலக பணியாளருக்கும் இடையிலான ஓர் உரையாடலைப் பார்ப்போம்.

**අනිල්:** **ආයුබෝවන් මහත්මයා.**
ஆயுபோவன் மஹத்மயா.
அனில்: **வணக்கம் ஐயா.**

**සේවකයා:** **ආයුබෝවන්. මහත්මයාට මොනවාද ඕනේ?**
ஆயுபோவன். மஹத்மயாட்ட மொனவத ஒனே?
பணியாளர்: **வணக்கம். என்ன வேண்டும் ஐயா?**

**අනිල්:** **මට රුපියල් පහේ මුද්දර පහක් දෙන්න.**
மட்ட ருப்பியல் பஹே முத்தர பஹக் தென்ன.
அனில்: **எனக்கு ஐந்து ரூபா முத்திரைகள் ஐந்து தாருங்கள்.**

**මුද්දර කවර තියෙනවාද?**
முத்தர கவர தியெனவாத?
**அஞ்சல் உறை இருக்கிறதா?**

**සේවකයා:** **තියෙනවා මහත්මයා. කීයක් ඕනේද?**
தியெனவா மஹத்மயா. கீயக் ஒனேத?
பணியாளர்: **இருக்கிறது ஐயா. எத்தனை வேண்டும்?**

**අනිල්:** **මට මුද්දර කවර තුනක් දෙන්න. මට මේ ලියුම ලියාපදිංචි කරන්නත් ඕනේ.**
மட்ட முத்தர கவர துனக் தென்ன. மட்ட மே லியும லியாபதின்ச்சி கறன்னத் ஒனே.
அனில்: **எனக்கு மூன்று அஞ்சல் உறைகள் தாருங்கள். எனக்கு இந்தக் கடிதத்தை பதிவுத்தபால் செய்யவும் வேண்டும்.**

**සේවකයා:** **දෙන්න මහත්මයා, ලියුමේ බර බලන්න.**
தென்ன மஹத்மயா, லியுமே பற பலன்ன.
பணியாளர்: **தாருங்கள் ஐயா, கடிதத்தின் நிறையைப் பார்ப்போம்.**

**මේකට රුපි.45 ක මුද්දර ගහන්න ඕනේ.**
மேகட்ட ருப்பியல் 45 க முத்தர கஹன்ன ஒனே.
**இதற்கு 45 ரூபாவுக்கான முத்திரை ஒட்ட வேண்டும்.**

**අනිල්:** **මෙන්න සල්ලි.**
மென்ன சல்லி.
அனில்: **இந்தாருங்கள் பணம்.**

**සේවකයා:** **මහත්මයා මෙන්න, මුද්දර අලවල දෙන්න.**
மஹத்மயா மென்ன, முத்தர அலவல தென்ன.
பணியாளர்: **இந்தாருங்கள் ஐயா, முத்திரைகளை ஒட்டித் தாருங்கள்.**

**අනිල්:** **හොඳයි මෙන්න.**
ஹொந்தய் மென்ன.
அனில்: **நல்லது இந்தாருங்கள்.**

### பயிற்சி



**இடைவெளிகளை நிரப்புக**

1. ආයුබෝවන් ..........................
2. මහත්මයාට ................. ඕනේ?
3. මුද්දර ............. තුනක් දෙන්න.
4. ලියුම ............... කරන්න ඕනේ.




## இறந்தகால தனி வாக்கியம் மற்றும் நிகழ்கால வினைமுற்று வாக்கியம்

நிகழ்கால வினைமுற்று வாக்கியம் (Present Perfect Tense) மற்றும் இறந்தகால தனி வாக்கியம் (Past Simple Tense) ஆகியவற்றில் காணப்படுகின்ற வினா நிலை வாக்கியங்களை (Interrogative Sentence) ஒன்றுடன் ஒன்று ஒப்பிட்டுப் பயில்வோம்.

(அ) நீ அந்தக் கடிதத்தை தபாலிட்டாயா?
Did you post that letter?
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஆ) நீ அந்தக் கடிதத்தை தபாலிட்டுவிட்டாயா?
Have you posted that letter?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

* Did you post?
நீ தபாலிட்டாயா?
* Have you posted?
நீ தபாலிட்டுவிட்டாயா?

(இ) நீ அந்தக் கதையை அவனிடம் கூறினாயா?
Did you tell him that story?
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஈ) நீ அந்தக் கதையை அவனிடம் கூறிவிட்டாயா?
Have you told him that story?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

* Did you tell?
நீ கூறினாயா?
* Have you told?
நீ கூறிவிட்டாயா?

(உ) நீ உனது வேலையை செய்துமுடித்தாயா?
Did you finish your work?
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஊ) நீ உனது வேலையை செய்துமுடித்துவிட்டாயா?
Have you finished your work?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

* Did you finish?
நீ செய்துமுடித்தாயா?
* Have you finished?
நீ செய்து முடித்துவிட்டாயா?

(எ) அவர்கள் கொழும்புக்கு நேற்றுத்தான் வந்தார்களா?
Did they come to Colombo only yesterday?
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஏ) அவர்கள் கொழும்புக்கு ஏற்கனவே வந்துவிட்டார்களா?
Have they already come to Colombo?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம்-Present Perfect Tense)

* Did they come?
அவர்கள் வந்தார்களா?
* Have they come?
அவர்கள் வந்துவிட்டார்களா?

(ஐ) அவன் நேற்றுத்தான் கண்டிக்குப் போனானா?
Did he go to Kandy only yesterday?
(இறந்தகால தனி வாக்கியம் -Past Simple Tense)

(ஒ) அவன் ஏற்கனவே கண்டிக்குப் போய்விட்டானா?
Has he already gone to Kandy?
(நிகழ்கால வினைமுற்று வாக்கியம் -Present Perfect Tense)

* Did he go?
அவன் போனானா?
* Has he gone?
அவன் போய்விட்டானா?

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதவியில் உயர்வு காண்போம்!



சித்தார்த், பெற்றோருக்கு ஒரே பிள்ளை. அவனை அவர்கள் பாசத்தைக் கொட்டி வளர்த்தனர். பணிவையும், பண்பையும், மரியாதையையும் சொல்லிக் கொடுத்தனர். அவனும் இவற்றை நன்கு கடைப்பிடிக்கத் தவறவில்லை. நேரம் கிடைக்கும் வேளைகளில், அவன் அனைத்துச் சிறுவர்களைப் போலவே சந்தோஷமாக ஊரை உலா வந்தான். இருப்பினும், தன் பெற்றோரின் கௌரவத்தைப் பாதிக்காத வண்ணம் அனைத்து காரியங்களிலும் ஈடுபட்டான். அவன் பெரியவர்களை மதிப்பதிலும் கௌரவப்படுத்துவதிலும் வல்லவன். தன் நற்பண்புகளை நல்ல விதத்தில் பயன்படுத்துவதில் சூராதி சூரன்.

அன்றொரு நாள், சூரிய வெப்பம் எல்லோரையும் வாட்டி எடுத்துக் கொண்டிருந்தது. மக்கள் வெளியில் வராமல் வீடும் அவர்களுமாக இருந்தனர். ஆனால், முதியவர் ஒருவர் வெட்டவெளியில் கந்தல் ஆடையுடன் சூரிய வெப்பத்தைப் பொருட்படுத்தாமல் உட்கார்ந்திருந்தார். அத்தெருவழியாக வந்த சித்தார்த்தின் கண்களை அப்பெரியவரின் துயர நிலை ஈர்த்தது. உடனே சித்தார்த் அவரை தன் வீட்டுக்கு அழைத்துச் சென்றான்.

அப்பெரியவருக்கு அணிய ஆடையும் உண்ண உணவும் கொடுத்தான். மகிழ்வடைந்த அப்பெரியவர் அவனை வாழ்த்தி ஆசிர்வதித்துச் சென்றார். இவ்வாறு ஏழை எளியோருக்கு உதவிகள் செய்து சிறந்த பிரஜையாக வாழ்ந்தான் சித்தார்த். அதற்கு அவனுடைய தாய், தந்தையருடைய சிறப்பான வளர்ப்பே காரணமாக அமைந்தது.

என்.சீராஸ் பானு,
அல்-அமீன் மு.வித்., மரதன்கடவல.



# காசநோய்

காசநோய்க்கான காரணியாக பெசிலஸ் டியூபசியூலோசிஸ் பக்றீரியா (Bacillus tuberculosis bacteria) எனும் நுண்ணங்கி காணப்படுகின்றது. இது, 1882 ஆம் ஆண்டு ரொபர்ட் கோச் என்ற மருத்துவரால் கண்டுபிடிக்கப்பட்டது.



**❋ காசநோய் ஏற்படுவதற்கான காரணங்கள்**

1. அல்லூட்டம் (குறையூட்டம்)
2. அதிகமாக மது அருந்துதல்
3. அளவுக்கதிகமான உடல் உழைப்பு
4. அசுத்தமான காற்றோட்டமற்ற இடங்களில் வாழ்தல்

**❋ நோய் அறிகுறிகள்**

1. அதிகளவான களைப்பு
2. உணவில் விருப்பமின்மை
3. உடல் நிறைகுறைதல்
4. நோய் கடுமையான நிலையில் இருமலுடன் குருதி வெளியேறுதல், காய்ச்சல் தோன்றுதல்.

❋ குழந்தை பிறந்து 24 மணித்தியாலத்தில் B.C.G. தடுப்பூசி கொடுக்கப்படுதல் என்பன இந்நோயை தடுக்கலாம்.

கே.எஃப்.அஃப்லா,
அந்நூர் மத்திய கல்.,
பானகமுவ.



# கரடி


கரடியின் ஆயுட்காலம் 35-60 வருடங்கள் ஆகும். இவை, கூடுதலாக பழங்கள், தேன் என்பவற்றை விரும்பி உண்ணக்கூடியன. கரடிகள் மலைப்பிரதேசங்களில் உள்ள காடுகளில் வசிக்க விரும்புவதுண்டு. ஆண் கரடிகள் பெண் கரடிகளைவிடப் பெரியவை. பெண் கரடி ஒருமுறைக்கு 2-5 குட்டிகளை ஈனுவதுடன், குட்டிகள் 4-5 வாரங்களில் கண் திறக்க ஆரம்பிக்கும். இவை இரண்டு வருடங்கள் வரை தாயுடன் வாழக்கூடியவை.

இஸ்மயில்-ஷாகித்தியன்,
இந்து ஆரம்ப பாடசாலை,
புஸ்ஸல்லாவ.

# கிரிக்கெட்

- ❋ 'கனவான்களின் விளையாட்டு' எனச் சிறப்பிக்கப்படும் விளையாட்டு கிரிக்கெட் ஆகும்.
- ❋ கிரிக்கெட்டின் தாயகம் - இங்கிலாந்து.
- ❋ கிரிக்கெட்டில் Wicket அறிமுகமானது - 1870இல்.
- ❋ கிரிக்கெட் சம்பந்தமான விடயங்களை தரும் நூல்-விஸ்டன்.
- ❋ கிரிக்கெட் துடுப்பாட்ட மட்டை (Bat) 'வில்லோ' மரத்தால் செய்யப்படுகிறது.
- ❋ கிரிக்கெட் உலகின் மிக உயர் விருது - L.G.
- ❋ கிரிக்கெட் மட்டையை வடிவமைத்தவர் - ஜோன் பால்
- ❋ முதன்முதல் 'ஹட்ரிக்' சாதனையை நிகழ்த்தியவர் - ஸ்போப் பேர்த்
- ❋ கிரிக்கெட் டெஸ்ட் போட்டிகளில் வேகமாக 100 விக்கட்டுகளும் 1000 ஓட்டங்களும் பெற்ற முதல் வீரர் - கபில்தேவ்
- ❋ முதலாவது கிரிக்கெட் வர்ணனை '1930 இல் இங்கிலாந்து - அவுஸ்திரேலியா' போட்டியின் போது ஆரம்பமானது.
- ❋ உலகின் முதலாவது கிரிக்கெட் மைதானம் - (1789) லோர்ட்ஸ் (இங்கிலாந்து)
- ❋ உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் அதிக முறை விளையாடிய வீரர் - ரிக்கி பொன்டிங்






எம்.அக்ரம், புத்தளம்.

# கற்கலாம்!

திருக்குறளைப் போன்றதே
சிறுவர் வார 'விஜய்' இதழ்!
இருக்குதங்கு யாவுமே,
இல்லையென்பதில்லையே!

கதைகளையும் கற்கலாம்,
கணினியையும் கற்கலாம்,
புதையல் போன்ற செய்திகளை
புதியதாகக் கற்கலாம்!

அண்டவெளியும் பார்க்கலாம்,
அறிவியலும் அறியலாம்,
உண்டு நல்ல கேள்வியும்,
உரிய நல்விளக்கமும்!

சிங்களமும் பயிலலாம்,
தெரிந்திடலாம் ஆங்கிலம்,
மங்கிடாத படங்களும்,
மற்றும் யாவும் பார்க்கலாம்!

ராம்.கீர்த்தனன்,
மக்கோ வீதி, இலிங்கநகர்,
திருகோணமலை.

# வெப்பநிலைகள்

1. மனித உடலின் வெப்பநிலை
   98.4°F= 36.9°C
2. நாயின் உடல் வெப்பநிலை
   100.94°F-= 38.3°C
3. குதிரையின் உடல் வெப்பநிலை
   100.04°F = 37.8°C
4. கொதிநீரின் வெப்பநிலை
   212°F= 100°C
5. பனிக்கட்டியின் வெப்பநிலை
   32°F= 0°C

வ.நிறோஜன்,
வரணி வடக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாட., யாழ்ப்பாணம்.

# சுருக்கப் பெயர்களின் விரிவு

- ❋ A.D.B - Asian Development Bank
  ஆசிய அபிவிருத்தி வங்கி
- ❋ I.L.O - International Labour Organization
  சர்வதேச தொழிலாளர் சங்கம்
- ❋ C.W.S - Co-operative Wholesale Society
  கூட்டுறவு மொத்த வியாபாரச் சங்கம்
- ❋ S.E.D.B - Sri Lanka Export Development Board
  இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சங்கம்

எம்.எ.முஸ்தாக் அஹமட்,
அல் நாசர் கல்லூரி, கொழும்பு-14

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுத்தத்தில் குற்றவாளிகள்

ஆங்கிலேயர் கண்டி இராச்சியத்திற்கு உப்புக் கொண்டு செல்வதை நிறுத்தினர். இதன்மூலம் கண்டி மன்னனை நெருக்குதலுக்கு உள்ளாக்குவதே அவர்களின் நோக்கமாக இருந்தது. யுத்தத்தின் போது, நிகழ்ந்த மனிதப் படுகொலைகளுக்கு மன்னனும் பிரதானியுமே பொறுப்புக்கூற வேண்டும் என ஆங்கிலேயர் தீர்மானித்தனர்.

இதற்கிடையில் மன்னனும் டேவியும் கண்டிப் பிரதானியே மனிதப் படுகொலைகளின் குற்றவாளி என கூறினர். ஆனால், கண்டிப் பிரதானியாகிய பிலிமத்தலாவையோ மன்னனே இந்த அழிவுகளுக்கு எல்லாம் பொறுப்புக்கூற வேண்டும் என்று தெரிவித்தார்.

இதேவேளை, ஆங்கிலப் படைகளுக்கு கண்டி இராச்சியத்தை நோக்கி இலகுவாகச் செல்ல வழி அமைத்துக்கொடுத்தது கண்டிப் பிரதானியாகிய பிலிமத்தலாவையே என்பதை மன்னர் பின்னர் அறிந்துகொண்டார். இதனால், மன்னர் பிரதானி மீது அதிகளவில் வெறுப்படைந்தார். அது மாத்திரமல்ல; மன்னன் மீது குற்றச்சாட்டுகள் சுமத்தும் வகையில் பிலிமத்தலாவை தொடர்ந்து செயற்பட்டார். இதனை மன்னர் நன்கு புரிந்துகொண்டார்.

ஆள்பதி நோத் மூலம் தான் மேற்கொள்ளும் எந்தவொரு நடவடிக்கைகளும் கண்டி மன்னனை வெறுப்படையச் செய்யாது என்பதை பிலிமத்தலாவை உணர்ந்துகொண்டார். நெருக்கடியான இந்த அமைதியற்ற சூழ்நிலையை முடிவுக்குக் கொண்டுவர நோத் தீர்மானித்தார். நிகழ்ந்த உயிர்ச் சேதங்கள் குறித்து தமது அனுதாபத்தை தெரிவிக்குமாறு ஆள்பதி மன்னனிடம் கேட்டுக்கொண்டார். ஆனால், அதற்கு மன்னர் தமது கடும் எதிர்ப்பைத் தெரிவித்தார். இதனால், யுத்தத்தை தற்காலிகமாக நிறுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொருத்தமான ரோமன் இலக்கத்தில் கோடிடுக — 1

1. 16 - XXVI / CVI / XVI
2. 49 - IXD / XLIX / XXXXIX
3. 205 - CCV / XXV / MCV
4. 35 - XXXL / XXXV / LLLV

## எதிர்ப்பாற் சொல் தருக — 2

1. குமரன் - ..............................
2. உத்தமி - ..............................
3. பாதகன் - ..............................
4. சேவகன் - ..............................
5. ஆடவர் - ..............................

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 30

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | | |
| | | | | 3 | |
| | 4 | | 5 | | 6 |
| 7 | | | | 8 | |
| | | | | | 9 |
| | | 10 | | | |

### மேலிருந்து கீழ்

01. தலைமுடி.
02. தானிய வகையொன்று.
04. 'மூடு' என்பதன் எதிர்ப்பதம்.
06. நூலால் அல்லது இழையால் நெய்யப்படுவது. (தலைகீழ்)
07. வீடு.
08. உறவு. (தலைகீழ்)
09. நீரில் வாழ்வது.
10. விரைவு. (தலைகீழ்)

### இடமிருந்து வலம்

01. 'சுவர் இருந்தால்தான் இது வரையலாம்' என்பது பழமொழி.
03. (குரலை) தாழ்த்து என்றும் அர்த்தப்படும்.
05. விளையாட்டுப் பொருளொன்று.
07. வீரம்.
10. முருகன்.

### குறுக்கெழுத்துப் போட்டி இல. 29 விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 பொ | ங் | 2 க | ல் | | |
| து | | ரு | | சி | |
| அ | | ம் | க | 3 ரு | 4 அ |
| றி | ன் | 5 ப | | | ங் |
| வு | | ல | 6 சீ | | கா |
| | 7 பு | கை | 8 வ | ண் | டி |






தயாரிப்பு - ஸாரா

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2013.05.01 ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

அற்லஸ் அறிவுக்கு விருந்து 414
விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு



## கழித்து, வரும் விடையை இலக்கத்தில் எழுதுக — 3



## சரியான நிழற்பிரதியுடன் இணைக்க — 4



## வலது பக்கம் நோக்கிச் செல்லும் கார்களில் வட்டமிடுக — 5



## அறிவுக்கு விருந்து - 411 விடைகள்

**போட்டி: 01**



**போட்டி: 02**



**போட்டி: 04**

1. புத்தகம்
2. திரைச்சீலை
3. அம்புலி
4. காலநிலை
5. பாரம்பரியம்

**போட்டி: 05**

1. 5 - V
2. 47 - XLVII
3. 1009 - MIX
4. 304 - CCCIV
5. 93 - XCIII

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 411 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
எம்.ரஸ்மி, பேரகஸ்வத்த, வெளிமடை.

**போட்டி: 02**
ஹுமைரா மல்ஹர், வறக்காப்பொளை.

**போட்டி: 03**
ர.யதுஷா,போபத்தலாவ.

**போட்டி: 04**
நீ.லக்ஷிகா, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம்.

**போட்டி: 05**
ஆர்.கதிர்காமர்,
தம்பதென்ன தோட்டம், அப்புத்தளை.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ஏ.வாஹித், குருநாகல்.
- எஸ்.ரேமன், பேராதனை.
- ரிஸ்மினா மூஸம்மில், பள்ளிப்போருவை.
- பி.வனிதா, எட்டியாந்தோட்டை.
- ஜி.ஷாகிரா, ருக்கஹவில.
- அ.அபிதா, ஹட்டன்.
- எம்.இர்ஷாத், கம்பளை.
- வி.நிர்மலன், வவுனியா.
- எஃப்.முன்ஸிரா, கிந்தோட்டை.
- எஸ்.சஞ்சீவ், பத்தரமுல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஹொரனை கல்வி வலயத்திற்கு உட்பட்ட ஹொரனை ஹாந்துபெல்பொல கனிஷ்ட வித்தியாலயமும் ஹொரனை எந்துராகல தமிழ் வித்தியாலயமும் இணைந்து அப்பாடசாலைகளின மாணவர்கள் பங்குபற்றுதலின்கீழ் நடைபெற்ற தமிழ்-சிங்கள புத்தாண்டு நிகழ்வுகளைப் படங்களில் காணலாம். (கொப்பேகன நிருபர்)




ஹுரீமல்லுவ, ரம்புக்கனையைச் சேர்ந்த நியாஸ்-நவ்சா தம்பதியரின் செல்வப் புதல்வன் அஹ்மட், தனது ஐந்தாவது பிறந்தநாளை 30.04.2013 அன்று கொண்டாடவுள்ளார். இவரை, குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர்கள் அனைவரும் அல்லாஹ்வின் அருள்பெற்று வாழ வாழ்த்துகின்றனர். (தகவல்: எப்.நஸ்ரின்)




அனுப்ப வேண்டிய முகவரி:
கைவண்ணங்கள்
த.பெ.எண் 2037
கொழும்பு



யு.சரிகா,
இந்து ஆரம்ப மாதிரிப் பாட.,
புஸ்ஸல்லாவ.



எஸ்.இந்துஜா,
சேதுவேன் தீவு, புத்தளம்.



எம்.ஷஈட் அஹமட்,
பதுரியா ம.கல்., மாவனல்லை.




யோ.சதர்சன்,
ச.சி.த.ம.வித்., பலாங்கொடை.



க.அபிராமி,
வேம்படி மகளிர் உ.பா., யாழ்ப்பாணம்.



எம்.ரமேஸ்குமார்,
ஸ்ரீ கிருஷ்ணா தமிழ் வித்.,
பெல்மடுள்ள.



க.எவான் புளோரியன்,
புனித மிக்கேல் கல்., மட்டக்களப்பு.



த.பிரியங்கன்,
யாழ்.இந்துக் கல்., யாழ்ப்பாணம்.



எ.ஃப்.சிஹாரா,
தெல்தனிய மு.வித்., பலகொல்ல.



வ.லதுஷனன்,
பெருந்தெரு விக்னேஸ்வரா வித்.,
திருகோணமலை.



ஐ. இஸ்ரத் பாத்திமா,
தல்துவ மு. ம.வித்., தல்துவ.

# உலகப் புகழ்பெற்ற ஓவியர்கள் சிலர்...



மைக்கலஞ்சலோ

## மைக்கலஞ்சலோ


மைக்கலஞ்சலோ (மார்ச் 6, 1475 - பெப்ரவரி 18, 1564), இத்தாலிய மறுமலர்ச்சிக் கால ஓவியரும் சிற்பியும் கவிஞரும் கட்டடக் கலைஞருமாவார். தனது இளம் வயதில் சிலகாலம் இலக்கணம் படித்த மைக்கலஞ்சலோ, அவரது தந்தையாரின் விருப்பத்துக்கு மாறாக, டொமினிக்கோ கிர்லாண்டாய்யோ (Domenico Ghirlandaio) என்பவரிடம் ஓவியத்துறையிலும் பெர்ட்டோல்டோ டி கியோவன்னி (Bertoldo di Giovanni) என்பவரிடம் சிற்பத்துறையிலும் பயிற்சி பெற்றார்.

தனது 13 ஆவது வயதில் கர்லண்ட் யோர்க் கலைக்கல்லூரியில் சேர்க்கப்பட்டார். அங்கு ஓவியம் உட்பட, பிற கலைகளையும் கற்றார். இக்காலத்தில் அவர் பல பிரபலமானவர்களைச் சந்தித்தார். அவர்கள் மூலம் மைக்கலஞ்சலோவின் கலை பற்றிய எண்ணங்கள் மாற்றம் பெற்றதுடன், விரிவாக்கமும் பெற்றன.

இவரின் கலைப்படைப்புகளில் பியேட்டா சிலை, டேவிட் அல்லது கம்பீரமான ஆண் சிலை, சிஸ்டைன் தேவாலய கூரைச் சித்திரம், இறுதித் தீர்ப்பு, பரிசுத்த பாவுல், யேசுவை சிலுவையில் அறைதல், இறக்கும் அடிமை, மோசஸ், ஆதமின் பிறப்பு, ஈடன் தோட்டம், இரவு, கட்டிப் போடப்பட்டுள்ள அடிமை, மேகங்கள், அதிகாலை என்பன முக்கியமானவையாகும்.



இறுதித் தீர்ப்பு ஓவியத்தின் ஒரு பகுதி



சிஸ்டைன் தேவாலய கூரைச் சித்திரம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புவியீர்ப்பு விசையால் ஒளிரும் விளக்கு



இத்தகைய 1000 புவியீர்ப்பு விளக்குகளை இந்தியா மற்றும் ஆபிரிக்காவிலுள்ள ஏழை மக்களிடையே விநியோகிக்க திட்டமிடப்பட்டுள்ளது. அத்தகைய விளக்கும் மணல் நிரப்பிய பையுமே இப்படத்தில் காணப்படுகின்றது.



இந்த உபகரணத்தின்மூலம் வேறு சிறு மின் குமிழையும் எரியவிடலாம். அத்துடன், வானொலியை இயங்கவைக்க முடியும். அதேபோல் சிறிய பற்றரியை சார்ஜ் செய்யவும் முடியும்.

மின்சக்தி கட்டமைப்போடு தொடர்பு இல்லாமல், இதுவரை காலமும் மின்சக்தியைப் பெறாத 1.5 பில்லியன் மக்களுக்கு மின்சக்தியைப் பெற்றுத்தரக்கூடிய ஒருமுறையை விஞ்ஞானிகள் தற்போது கண்டுபிடித்துள்ளனர். வழமைபோன்று நீர் அல்லது நிலக்கரி போன்றவற்றாலோ, வேறு எரிபொருட்களைப் பயன்படுத்துவதாலோ இம்மின்சக்தியைப் பெற்றுவிட முடியாது. மாறாக, புவியீர்ப்புச் சக்தியாலேயே இது கிடைக்கின்றது.

இதனை அவர்கள் 'புவியீர்ப்பு ஒளி' அல்லது 'புவியீர்ப்பு விளக்கு' (Gravity light) என பெயரிட்டுள்ளனர். இது புவியீர்ப்புச் சக்தியிலேயே உருவாகின்றது. அதன்படி, இந்த விஞ்ஞானிகளால் உற்பத்தி செய்யப்பட்டுள்ள புவியீர்ப்பு விளக்கிற்கு தொங்கவிடப்படும் மணல் நிரப்பப்பட்ட பையின்மூலமே ஒளியேற்றப்படுகின்றது.



மணல், கற்கள், சக்கைகல் போன்ற அதிக பாரத்தைக் கொண்ட பாறைகள் அடங்கிய கூடையை தொங்கவிடுவதன் மூலமே இந்த 'ஈர்ப்பு' ஒளி என பொருள்படும் 'கிரேவிட்டி லைட்' (Gravity light) எனும் பெயரைக் கொண்ட இந்த விளக்கை எரிய விடலாம்.



ஈர்ப்புச்சக்தி விளக்கில் ஒளிவீசும் விதம்.

இந்த மணல்பையை டைனமோ இயந்திரத்தின்மூலம் படிப்படியாக மேலே உயர்த்துவதன்மூலம் ஏற்படும் புவியீர்ப்புச் சக்தியில் 'எல்.ஈ.டி' (LED) மின்குமிழ் ஒன்று எரியக்கூடிய அளவு மின்சாரத்தை பெற்றுக் கொள்ள முடியும் என்கின்றனர் இதன் உற்பத்தி நிறுவனத்தினர். இவ்வாறு மணல் கூடையொன்றை மூன்று விநாடிக்கு உயர்த்துவதன்மூலம் எல்.ஈ.டி மின்குமிழ் ஒன்றை முப்பது விநாடிக்கு எரிய விட முடியும் என அந்த நிறுவனத்தினர் அண்மையில் இங்கிலாந்தில் நடத்திய செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்தனர்.

பிரதான மின்சக்தி வலைப்பின்னலில் இருந்து அதிக தூரத்தில் அமைந்திருக்கும் பிரதேசங்களுக்கே இத்தகைய மின்சாரம் பெறும் முறை மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இதன்படி, இதன் ஆரம்ப நடவடிக்கையாக இந்தியாவிலும் ஆபிரிக்காவிலும் மிகவும் ஏழ்மையான 1000 பேருக்கு இந்த விளக்குகளை இலவசமாக வழங்க இந்த உற்பத்தி நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

சூரியன் மறைந்த பின் ஒளியேற்றுவதற்காக மண்ணெண்ணெய், உயிர்வாயு போன்ற எரிபொருட்களைப் பயன்படுத்துபவர்களுக்கு இத்தகைய முறையில் மின்சாரம் கிடைப்பது மிகவும் இலகுவான வாழ்க்கை முறையை அமைத்துக்கொள்ள ஒரு வரப்பிரசாதமாக அமையும். மண்ணெண்ணெய்யால் எரியும் குப்பி விளக்குகளால் ஏற்படும் விபத்துக்களையும் உயிர் ஆபத்துக்களையும் இதன்மூலம் தடுக்கலாம். அதுமாத்திரமல்ல, குப்பி விளக்கால் ஏற்படும் சுகாதாரக் கேடுகள் இத்தகைய புவியீர்ப்பு விளக்குகள்மூலம் ஏற்படுவதில்லை. அத்தோடு, சூரிய சக்தியைப் போன்றே சூழலுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தாத வகையில் பாவிக்கக்கூடிய மின்சக்தியாக இதனைக் குறிப்பிடலாம்.

உலகில் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்ட கையில் எடுத்துச் செல்லக்கூடிய கணினியாகிய 'சைஒன்' 'Psion' மடிக்கணினிக்குரிய பாதுகாப்பு கவசத்தையும் இந்நிறுவனமே உற்பத்தி செய்தது.

உலக வங்கியின் கணிப்பீட்டின்படி, விளக்குப் புகையை சுவாசிப்பதால் உலகம் முழுவதும் 780 மில்லியனுக்கும் அதிகமான பெண்களும் பிள்ளைகளும் துயரங்களை அனுபவிக்கின்றனர். நாள்தோறும் ஒருவர் இரண்டு பெக்கட் சிகரட் புகைப்பதற்கு சமமான அளவு புகையை பெண்களும் பிள்ளைகளும் சுவாசிக்கின்றனர். அதனால், அபிவிருத்தி அடைந்துவரும் நாடுகளில் வயது வந்த பெண்களில் நூற்றுக்கு 60% மானோர் நுரையீரல் புற்றுநோயால் அவதியுறுகின்றனர். இவர்கள் எவரும் புகைப்பிடிப்பவர்கள் அல்லர்.

இத்தகைய புகையால் கண்கள் பாதிப்படைவதோடு, வேறு பல நோய்களும் ஏற்படுகின்றன. அத்துடன், எரிகாயங்களுக்கும் பெருந்தொகையானோர் இலக்காகின்றனர். இந்தியாவில் மாத்திரம் வருடமொன்றிற்கு 2.5 மில்லியனுக்கும் அதிகமானோர் குப்பி விளக்கு விபத்துக்களால் மோசமான எரிகாயத்தை அடைகின்றனர்.

**ஜெயகர்**



இப்புதிய மின் உபகரணத்தை உருவாக்கியோர்: இடமிருந்து வலமாக, பெட்ரிக் ஹண்ட், மார்ட்டின் ரிட்ஃபோர்ட், மாரியோ சிக்குவேரா மற்றும் ஜிம் ரிச்சிஸ். தொழில்நுட்பத்தின் அபிரிமிதமான முன்னேற்றத்தால் குறைந்த சக்தியில் இயங்கும் பல உபகரணங்களை உற்பத்தி செய்யக்கூடியதாக உள்ளன என இவர்கள் தெரிவிக்கின்றனர்.

## சைக்கிள் வெற்றியாளர்

'விஜய்' யின் சைக்கிள் வெற்றியாளர்களுள் ஒருவரான மட்டக்களப்பைச் சேர்ந்த கே.கிருஷாந், தனக்குரிய சைக்கிளை விஜய நியூஸ்பேப்பர்ஸ் பத்திரிகை முகவர் வி.ஏகாம்பரநாதனிடமிருந்து பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'Stromboli' எரிமலை



மத்திய தரைக் கடலில் சிசில் தீவுகளுக்கு வடக்கிலுள்ள லிப்பாரி என்ற தீவில் Stromboli என்ற எரிமலை அமைந்துள்ளது. இது ஐரோப்பாவிலேயே அதிகமாகக் குமுறுகின்ற எரிமலைகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றது. இதன் உயரம் 3,038 அடிகளாகும். இந்த எரிமலை இறுதியாக 1921 ஆம் ஆண்டிலேயே வெடித்திருந்தது. அதனைத் தொடர்ந்து தொடர்ச்சியாக இது புகைந்துகொண்டிருப்பதுடன், இதன் புகை கடலில் சங்கமித்துக்கொண்டும் இருக்கின்றது.

10 அல்லது 15 நிமிடங்களுக்கு ஒரு தடவை இந்த எரிமலை குமுறுவதன் காரணமாகவே, இவ்வாறு புகையை அது கக்கிக்கொண்டிருக்கின்றது. இந்த எரிமலையின் தொடர்ச்சியான செயற்பாட்டின் காரணமாக, இதனை மத்திய தரைக்கடலின் 'ஒளிக் கம்பம்' என்று அழைக்கின்றனர். எரிமலை, தீவிலுள்ள காலநிலை மற்றும் ரம்யமான கடல் ஆகிய இயற்கை அமைவுகளின் காரணமாக, இங்கு பெருமளவில் உல்லாசப் பிரயாணிகள் பயணம்செய்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# உலகில் மலசலகூட வசதி உள்ளோரைவிட கைப்பேசி வசதியுடையோர் அதிகமாம்!



உலகிலேயே மலசலகூட வசதி உள்ளவர்களைவிட, கைப்பேசி வசதி உள்ளவர்களே அதிகம் என ஆய்வொன்றின் மூலம் தெரியவந்துள்ளது. ஐக்கிய நாடுகள் சபையினாலேயே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அந்த ஆய்வின்படி, உலக சனத்தொகையில் 7 பில்லியனில் 6 பில்லியன் எண்ணிக்கையானோர் கைப்பேசிகளைப் பாவிக்கின்றனர் என்று தெரியவந்துள்ளது. ஆனால், மலசலகூட வசதியை கொண்டிருப்பவர்களின் எண்ணிக்கையோ உலக சனத்தொகையில் 4.5 பில்லியன் பேர் மட்டுமே.

அண்மையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றின் போதே, ஐக்கிய நாடுகள் சபையின் துணைச் செயலாளர் ஜேன் எலிசன் இக்கருத்துக்களைத் தெரிவித்துள்ளார். மேற்படி ஆய்வுகளுக்கு அமைய, இந்தியாவிலேயே மலசலகூட வசதிகள் மிகவும் குறைந்த அளவில் இருப்பதாகவும், குறிப்பாக உலக அளவில் மலசலகூட வசதிகள் இல்லாதோரில் 60 சதவீதமானவர்கள் இந்தியாவில் வசிப்பவர்களே என்றும் அறியப்பட்டுள்ளது. இதேவேளை, இந்தியாவில் மாத்திரம் தற்போது 1 பில்லியனுக்கும் அதிகமானோர் கைப்பேசிப் பாவனையாளர்களாக இருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனால், அதிக சனத்தொகையைக் கொண்ட சீனாவில் மலசலகூட வசதி இல்லாதோர் எண்ணிக்கை 14 மில்லியனாக இருப்பதும், அங்கு கைப்பேசிகளைப் பாவிப்போரின் எண்ணிக்கை 986 மில்லியன் என்றும் தெரியவந்துள்ளது.

# மழை வருவதற்கான அறிகுறிகள்

## கிராம மக்களின் எதிர்வுகூறல்கள்



### இலை சருகுகள் மேலெழுதல்

அதிக வறண்ட காலநிலை நிலவும் காலத்தில் உலர்ந்துபோன புற்கள் மற்றும் தூசுடன் கலந்த காற்று சுழியாக மேலே எழுந்து பரவுமாயின், விரைவில் மழை பெய்யும் என அறியலாம்.

### வானில் சிதறிய மேகங்கள்

வானில் மேகங்கள் சிதறிக் கூட்டம் கூட்டமாகக் காணப்பட்டால், மழை விரைவில் பெய்யும் என கிராம மக்கள் கூறுவர்.



### தூக்கணாங் குருவிகளின் கூடு

தூக்கணாங் குருவிகள் கூட்டமாக வாழ்பவை. அவை, ஒரு மரத்தில் பல கூடுகளை



அமைக்கின்றன. மரத்தின் மேற்பகுதியில் கூடுகளை அவை அமைத்தால் எதிர்வரும் காலங்களில் நன்றாக மழை பெய்யும் என்பதை அறியலாம். மாறாக, தூக்கணாங் குருவிகள் மரங்களில் தாழ்வாகக் கூடுகளை அமைத்தால், அது வறண்ட காலநிலை தொடரும் என்பதற்கான அறிகுறியாகும்.

### கறுப்பு எறும்புகள் வீட்டிற்கு வந்தால் மழை பெய்யும்

கறுப்பு எறும்புகள் கூட்டம் கூட்டமாக வீட்டுக்குள் காணப்பட்டால், மழை விரைவில் பெய்யும் என்று கருதலாம். வெளியில் நிலவும் வெப்பநிலையைப் பொறுத்துக்கொள்ள முடியாமலேயே எறும்புகள் வீட்டுக்குள் வருகின்றன.

### கோழிகள் கூட்டமாக அமர்ந்து மண் குளித்தால் மழை வரும்

வீட்டில் வளர்க்கப்படும் கோழிகள் கூட்டமாக அமர்ந்து மண் குளித்தால் மழைக்காலம் ஆரம்பிக்கப்போகின்றது என்று அர்த்தமாகும்.

### பருந்துகள் தாழப்பறந்தால் மாலையில் மழை வரும்

பருவப்பெயர்ச்சிக் காலத்தில் தரைப்பகுதி சூடாகி மேலெழும் வளியின் உதவியுடன் பருந்து தாழப்பறந்து வந்து இரை தேடும். இவ்வாறான நிலையில் பகற்பொழுதில் மழை பெய்யும். பருந்துகள் தாழப்பறந்தால் மாலையில் அல்லது பகற் பொழுதில் மழை பெய்யும் என்றும் கருதப்படுகின்றது.

### விளாம்பழ மரத்தின் கிளைகள் முழுவதும் காய்கள்

விளாம்பழ மரத்தில் விளாம்பழங்கள் அதிகம் விளைந்திருந்தால், மழை பெய்வதற்கு இன்னும் நீண்ட நாளாகும் என்று கிராம மக்கள் அறிவர். அதேபோன்று, முருங்கை மரத்தில் மலர்கள் அதிகம் பூத்திருந்தால், மானா புதர்கள் அதிகம் உதிர்ந்தால், கள்ளிச் செடிகளில் மலர்கள் அதிகம் பூத்திருந்தால் நீண்ட காலம் வறட்சி நிலவும்.

### வான் பரப்பு செந்நிறமானால்...

மாலைப் பொழுதில் சூரியன் மறையும்போது, வானில் தொடர்ச்சியாக செந்நிறம் தென்படுமானால், அல்லது இரவில் விடியல் பொழுதில் விண்மீன்கள் தெளிவாகத் தெரியுமானால், நீண்ட வறண்ட காலநிலை தொடரும்.

மேலும், விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் உலர் வலய விவசாயிகள் காக்கைக் கூடுகளில் உள்ள முட்டைகளை அல்லது காக்கைக்



குஞ்சுகளை அவதானிக்கும் பழக்கத்தினைக் கொண்டுள்ளனர். கூடுகளில் முட்டைகள் குஞ்சுகள் ஒன்று அல்லது இரண்டாக இருக்குமாயின், எதிர்வரும் காலங்களில் வறட்சி நிலவும் என்பதனை அவர்கள் புரிந்துகொள்வர். ஆனால், மூன்று நான்கு குஞ்சுகள் இருக்குமாயின், அல்லது அந்தளவு முட்டைகள் இருக்குமாயின், எதிர்வரும் நாட்களில் நல்ல மழைவீழ்ச்சி கிடைக்கும் எனவும் நம்புகின்றனர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பயனுள்ள முடிச்சுக்கள் சில...


(கடந்த வாரத் தொடர்ச்சி)

### 10. சுருக்குக் குழைச்சு (SheepShank)





தளர்ந்த கயிறுகளை இறுக்கவும் நீண்ட கயிறுகளைக் குறுக்கவும் இக்குழைச்சு உபயோகமாக இருக்கும்.

### 11. பண்டியிழுப்பான் முடிச்சு (Manharness knot)





இழுப்புக் கயிறுகளில் இழுக்கும் வளையமாக இம்முடிச்சு உபயோகிக்கப் படும்.

### 12. தீயணைப்போன் நாற்காலி முடிச்சு (Fireman's Chair)




இதில் ஓர வளையங்கள் உள்ளன. இது ஆபத்தில் அகப்பட்டவர்களை இறக்குவதற்கு உபயோகமாக இருக்கும் முடிச்சாகும்.

### 13. சதுரக் கட்டு (Middleman's knot)



முழைத்தும்புக் குழைச்சில் ஆரம்பித்து முக்கிய திருப்பங்களில் செங்கோணமாக இறுகக் கட்டுகள் போடவும். முழைத்தும்புக் குழைச்சைக் கட்டி முடிக்குக.

### 14. மூலைவிட்டக் கட்டு (Lashing)





இரு கோல்களையும் சுற்றி மரமுடியைப் போட்டு ஆரம்பிக்குக. ஒவ்வொரு கன்னத்துத்தடியிலும் முறையாக வளைத்துச் சுற்றி எடுக்குக. முழைத்தும்புக் குழைச்சைப் போட்டு கட்டைப் பூர்த்தி செய்க.

### 15. கத்திரக் கட்டு (Splices)



ஒரு கோலைச் சுற்றி முழைத்தும்புக் குழைச்சுப் போடுக. பின்னர் இரண்டு கோல்களையும் சுற்றி எடுக்குக. ஒரு கோலைச் சுற்றி முழைத்தும்புக் குழைச்சில் போட்டுப் பூர்த்தி செய்குக.

### 16. தொற்றுக்கள் வைத்தல்



(முடிச்சுக்கள் தொடரும்)

# பாலர் சாரணர் குழு




உலக சாரணர் அமைப்பின் வரலாற்றை நோக்கினால் முக்கியமான ஒரு விடயத்தில் கவனம் செல்லும். அதாவது 'பீவர்ஸ்' சாரணர் பிரிவே அதுவாகும். பாலர் பாடசாலைக்குச் செல்லும் பராயத்தினரை உறுப்பினர்களாகக் கொண்டதே, இந்த 'பீவர்ஸ்' சாரணர் குழுவாகும். 1960 ஆம் ஆண்டு தொடக்கம் 1970 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிகளில் கெனடா உட்பட, மேலும் பல நாடுகளில் இந்த 'பீவர்ஸ்' சாரணர் குழு பரவியிருந்தது. இலங்கையில் சாரணர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டு நூறு வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளதை முன்னிட்டு இலங்கையிலும் மேற்படி 'பீவர்ஸ்' சாரணர் குழுவை அமைக்கும் ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.


# சாரணனின் சகிப்புத்தன்மை

ஒரு சாரணன் தன்னுடைய சகல கடமைகளையும், வேலைகளையும் சரிவர நிறைவேற்ற வேண்டுமாயின், தேகாரோக்கியமும் சுறுசுறுப்பும் உடையவனாக இருத்தல் வேண்டும். பல விளையாட்டுக்களை விளையாடுவதும் ஓட்டம், நடத்தல், ஈருருளி வண்டி ஓடல் முதலியவற்றைக்கொண்ட அப்பியாசங்களை அதிகமாகச் செய்தலுமே இதன் கருத்தாகும்.

ஒரு சாரணன் அதிகமாகத் திறந்த வெளிகளிலேயே துயிலல் வேண்டும். வீட்டுச் சாளரங்களை நன்றாக மூடிவிட்டு உள்ளே துயிலும் பழக்கமுடையவனொருவன் வெட்டவெளியில் துயிலும்போது ஒவ்வாமையால் கஷ்டப்படுவான்.

காலை அல்லது மாலையில் தினசரி சிறிது நேரம் தேகாப்பியாசம் செய்வது, ஆரோக்கியத்திற்குச் சிறந்த முறையாவதுடன், தேகாப்பியாசத்தினால் சரீரத்தின் ஒவ்வொரு பாகமும் சிறந்த முறையில் இயங்குகின்றது. இதனால், சதைக் கொழுப்பு ஏற்படுவது தடுக்கப்படுகிறது. அத்துடன், உடலின் அனைத்துப் பாகங்களுக்கும் இரத்த ஓட்டம் முறையாக நடைபெற உதவுகின்றது.

சாரணர் தம் மூக்கினாலேயே சுவாசிப்பர். அவர்கள் வாயினால் சுவாசிக்கமாட்டார்கள். இந்த முறையினால் அவர்களுக்குத் தாகவிடாயேற்படுவதில்லை. அவர்கள் சீக்கிரத்தில் மூச்சிழப்பதில்லை. காற்றில் கலந்துள்ள நோய்க்



கிருமிகளை அவர்கள் உள்ளிழுத்துக்கொள்வதில்லை. இரவில் துயில்கையில் குறட்டைவிடும் பழக்கத்தைக் கொண்டிருப்பதில்லை.



## CAMPOREE 2013

### கொழும்பு சாரணர் கெம்போரியில் இலச்சினை, பாடல், கழுத்துப்பட்டி வடிவமைப்புப் போட்டி

கொழும்பு மாவட்ட சாரணர் அமைப்பின் நூறு வருட வரலாற்றை சிறப்பிக்குமுகமாக இயற்கை வனப்பு அல்லது சாரண உணர்வை உணர்த்தும் விதமாக வடிவமைக்கப்பட்ட 2013 ஆம் ஆண்டின் கெம்போரி இலச்சினை, பாடல், கழுத்துப்பட்டி ஆகியனவற்றை வடிமைப்பதற்கான போட்டியில் நீங்களும் கலந்துகொள்ளலாம். தெரிவுசெய்யப்படும் சிறந்த படைப்புக்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசுகள் வழங்கப்படும்.

உங்கள் படைப்புக்களை அனுப்ப வேண்டிய முகவரி:

CAMPOREE 2013 (Competition)
Scout Association,
15A, Chitrampalam A Gardner Mawatta,
Colombo-02.

ஊடக அனுசரணை

SCOUTING விஜய் சிசு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## செங்குத்தாக மேல் எழக்கூடியதும் தரையில் இறக்கக்கூடியதுமான

# V-22 Osprey விமானம்


இராணுவக் குழுவொன்று யுத்த தளபாடங்களுடன் செங்குத்தாக மேலே எழக்கூடியதாகவும், முடிந்தவரையில் அதிவேகமாகப் பறந்த நிலையில் மீண்டும் செங்குத்தாக தரையிறக்கக்கூடியதுமான விமானம் ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது. அமெரிக்க பெல் ஹெலிகொப்டர் நிறுவனமும் பொயிங் நிறுவனமும் இணைந்தே இந்த சாதனைமிகு விமானத்தை தயாரித்து அளித்துள்ளன.




V-22 Osprey விமானம் ஒரு யுத்தக் கப்பலில் மிக இலகுவாக தரையிறக்கக்கூடியது. இதனால், அதன் சிறகுகளை மடக்கி அதிக இடத்தை மீதப்படுத்தும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. கூடவே, அதிவிசேட ரேடார் தொகுதியொன்றும், உயர்ந்த தொழில்நுட்பத்துடன்கூடிய நைட்விஷன் தொகுதியொன்றும், புலன் உணர்வுத் தொகுதியொன்றும் இந்த விமானத்தில் உள்ளது.




| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முதலாவது விமானப் பயணம் | 1989 | சேவையில் ஈடுபடுத்தியது | 2007 | இதுவரை உற்பத்தி செய்யப்பட்ட விமானங்களின் எண்ணிக்கை | 160 | பெறுமதி அமெரிக்க டொலர் மில்லியன் | 69.3 |
| உச்சவேகம் மணிக்கு கி.மீற்றர் | 500 | அதிகபட்ச நிறை இறாத்தல் | 33,140 | செயலணி | 04 | பயணிக்கக்கூடியோர் தொகை | 24 |




### வரலாறும் இதுவரையிலான நடவடிக்கைகளும்

இத்தகைய அடிப்படை தொழில்நுட்பங்கள் நிறைந்த விமானமொன்றின் தேவை 1980 ஆம் ஆண்டே உணரப்பட்டது. அப்பொழுது ஈரானில் பணயக் கைதிகளாக இருந்தோரை மீட்க மேற்கொள்ளப்பட்ட முயற்சி தோல்வியில் முடிந்ததால், இந்த உணர்வு ஏற்பட்டது. இதன்பின் கடந்த சில வருடங்களில் பல்வேறு பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. இதுவரை ஆப்கானிஸ்தான், ஈராக் மற்றும் மாலி ஆகிய நாடுகளில் இத்தகைய விமானங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இரஞ்சித் ஜெயகர்

இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினால் 2013, ஏப்ரல் மாதம் 24 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8 Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday April 24, 2013.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org